போதனா நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா: 8.00

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 26 ஞாயிற்றுக்கிழமை (10.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 203

வாழ்நாள் முழுவதும்
வளமுடன் வாழ
அண்ணா
**ஜீவாகாரம்**
உடனடியாக உண்ணககூடிய
நிலையில் உள்ள சத்துணவு
விபரங்களுக்கு
அண்ணா கோப்பிக் கடை
இல.4 நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

### கொழும்பில் பரபரப்பு

## சொகுசு வாகனத்திலிருந்து நான்கு சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் அமைந்துள்ள கறுவாத் தோட்டம் மலலசேகர மாவத்தைப் பகுதியில் சொகுசு வாகனம் ஒன்றில் இருந்து படுகொலை செய்யப்பட்ட நிலையில் நாலு பேரின் சடலங்களை பொலிஸார் நேற்று அதிகாலை கண்டெடுத்தனர்.

கைகள் பின்புறமாக கட்டப்பட்டும் கண்கள் துணியினால் கட்டப்பட்டுள்ள நிலையிலும் இச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இறந்தவர்களில் ஒருவர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் மத்திய மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் எம்.ரி.எம். அமீன் (வயது 39) என தெரியவருகின்றது. (10 ஆம் பக்கம் பார்க்க)



# பொதுக்கட்டமைப்பை விரைவில் ஜனாதிபதி செயற்படுத்துவார்!

## தமது பொறுப்பை உணர்ந்து நோர்வே செயற்படவேண்டும்

### அறிவுரை கூறுகிறார் ரட்ணசிறி

(கொழும்பு)

நோர்வேத் தரப்பினர் தமது பொறுப்பை உணர்ந்து செயற்படவேண்டும் என இலங்கையின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இராணுவப் புலனாய்வுத் பிரிவினர் படுகொலை செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பியினர் பாராளுமன்றத்தில் கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதிப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அரச தரப்பு மீண்டும் உறுதியளிப்பு

(கொழும்பு)

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்டுள்ள சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பை எவ்வளவு விரைவாக செயற்படுத்த இயலுமோ அவ்வளவு விரைவாக அதனைச் செயற்படுத்த ஜனாதிபதி திடசங்கற்பம் பூண்டிருப்பதாக ஜனாதிபதியின் செயலாளர் கருணா ரத்தின தெரிவித்துள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பீற்றர்ஸன் இலங்கை வருகிறார்!

## ஊடகவியலாளர் கைது

இராணுவப் புலனாய்வாளர் முத்தலிப்பின் கொலை தொடர்பில் விசாரணைக்கென ஊடகவியலாளர் ஒருவர் கைது

(கொழும்பு)

**நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்றார்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்குவரத்துக்கான பாது காப்பு விவகாரம் தொடர்பான நெருக்கடிக்குத் தீர்வுகாணும் நோக்குடனேயே பீற்றர்ஸன் இலங்கைக்கு வருகை தரவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தமது போக்குவரத்துத் தொடர்பில் அரசாங்கத்தின் பாதுகாப்பு உறுதிமொழியை எதிர்பார்த்து விதித் துள்ள காலக்கெடு முடிவதற்கு இன்னமும் ஐந்து நாட்கள் எஞ்சியுள்ளன.

இந் நிலையில் பீற்றர்ஸனின் இலங்கை விஜயம் பெரிதும் முக்கியம் பெறுகிறது. இதேவேளை அரசுக்கும் தமிழீழ விடு தலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள பொதுக் கட்டமைப்பின் செயற்பாடு குறித்தும் இவ் விஜயத்தின்போது ஆராயப்படவுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

கென ஊடகவியலாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் நேற்று முன் தினம் களனியில் வைத்து கைது செய் யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இச் சம்பவம் தொடர்பில் இரண்டு பெரும்பான்மை இனத்தவர் உட் பட ஆறு பேர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட சஞ்சீவ் என்பவரின் உதவியுடனேயே முத் தலிப கொலைக்குரிய ஆயுதங்கள் ஊடகத் துறையினரின் வாகனத்தில் எடுத்துவரப் பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.(இ-4)



## போர்ப்படை பயிற்சி நிறைவில் தலைவர் பிரபா பங்கேற்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் போர்ப் படை அணிகளின் இள நிலை அதிகாரிகள் பயிற்சிநெறி நிறைவு நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் கலந்துகொண்டு சிறப்பித் தார்.

இளநிலை அதிகாரிகள் பயற்சிநெறி மாணவப் போராளி களின் தலைமையில் நடைபெற்ற (10 ஆம் பக்கம் பார்க்க)




SWISS
Mineral Water

Buy Swiss Mineral and win several lakhs worth of prices



Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59

Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63

விஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

## ஆசிரியர்களுக்கு கிரமமான முறையில் பதவி உயர்வுப் பரீட்சைகள்

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சேவையில் ஒரு தரத்தில் இருந்து இன்னுமொரு தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்கான போட்டிப் பரீட்சையை 2006ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் கிரமமான முறையில் நடாத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எல்.குணவர்த்தன அறிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியசேவையில் தரம் 3-1 இருந்து 2-1வரை புள்ளி அடிப்படையிலும், போட்டிப்பரீட்சை அடிப்படையிலும் முதலாம் வகுப்பிற்கு போட்டிப்பரீட்சை மூலமும் ஆசிரியசேவை பிரமாணக்குறிப்பிற்கமைய பதவி உயர்வு வழங்கப்படுமென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

## போக்கு வரத்துக் கண்காணிப்பில் யாழ்.பொலிஸார் தீவிரம்

யாழ்ப்பாணம் தபால் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை மட்டும் 52 பேர் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம் இல்லாமை தலைக்கவசம் அணியாமை, ஒரு வழிப்பாதை விதியினை மீறிப் பயணம் செய்தமை, மற்றும் தடைசெய்யப்பட்ட இடத்தில் நிற்பாட்டியமை என்பவற்றுக்காக பொதுமக்கள் தண்டப்பணம் செலுத்தியதாக தபால் நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக அண்மைக்காலமாக பொலிஸார் வீதிக்கண்காணிப்பில் மிகவும் உசார் நிலையில் உள்ளதால் தினமும் தபாலகத்தில் தண்டப்பணம் செலுத்துவோரைக் காணக்கூடியதாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-122)


### சிறுவிளம்பரம்

**மலையாள பகவதி ஜோதிடாலயம்**

Pandit Nara Semanaidu
World Expert Astrologer

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிட பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கவிருக்கின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

ஹோட்டல் பிள்ளையார்
இன்
அறை இல.09,
31, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.
T.P - 0779122836
நேரம் காலை 9.00 -
(9567) இரவு 8.30 வரை


## மரவேலைத் தொழிற் பயிற்சி

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 16-35 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களுக்கு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் 6 மாதகால மரவேலைத் தொழிற்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பயிற்சி பெறவிரும்பும் தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்டவர்கள் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 15ம் திகதிக்குப் பிந்தாமல் கிராமிய தொழிற் பயிற்சி நிலையம், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, கச்சாய் வீதி, சாவகச்சேரி (சக்திஅம்மன் விததியாலயம முன்பாக) என்ற முக வரிக்கு விண்ணப்பத்தைச் சமர்ப் பிக்கலாம். பயிற்சிக் காலத்தின் போது ஊக்குவிப்புப்படியும் பயிற்சி நிறைவில் சான்றிதழும் உபகரணப் பொதியும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-29)

## இந்திரா காந்தியை அவதூறு செய்தமைக்காக நிக்சன் மீது நஷ்டஈடு கோரி வழக்குத்தாக்கல்

(லண்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாக நிக்சன் இருந்தபோது அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி யை 'சூனியக்காரி' என்று வர்ணித்ததாக சமீபத்தில் செய்தி வெளி யானதை தொடர்ந்து இந்தூர் மாவட்ட கோர்ட் டில் ஷோபா என்ற பெண் வழக்குத் தொடர்ந்து இருக் கிறார்.

வழக்கில் அவர், நிக்சனின் பேச்சு நூறுகோடி இந்திய மக்களின் உள்ளத்தில் வருத்தத்தை ஏற்படுத்தி விட்டது.இதற்காக நிக்சன் ரூபா 5ஆயி ரம் கோடி நஷ்ட ஈடுவழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு நாளை திங்கட் கிழமை விசாரணைக்கு வருகிறது. இந்த வழக்குப் பற்றி ஷோபா கூறு கையில், இந்த வழக்கு மூலம் கிடைக்கும் பணத்தை குஜராத் வெள்ள நிவாரண நிதிக்கு கொடுப் பேன் என்றார். (அ-9)

## 4 வயதுச் சிறுவன் கொலை 4 சிறுவர் பொலிஸால் கைது

(லண்டன்)

மகாராஷ்டிரத்தில் 4 வயது சிறுவனைக் கொலை செய்த குற்றத்துக்காக 4 சிறுவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புனேயில் குடிசைப் பகுதி ஒன்றில் 10 முதல் 12வயதுள்ள 5 சிறுவர்கள் ஒரு திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டனர். அப்போது பவன்ராம் சந்திர குர்கடே என்ற 4 வயது சிறுவன் அதைப் பார்த்துவிட்டான்.

யாரிடமாவது சொல்லிவிடுவான் என்று இந்த ஐந்து சிறுவர்களும் சிறுவனைக் கடத்திச் சென்று கழுத்தை நெரித்துக் கொலை செய்தனர்.

பவன் காணாதது குறித்து அவனது பெற்றோர் பொலிஸில் புகார் செய்தனர்.

இந்நிலையில் கடந்த 27 ஆம் திகதி சிறுவனின் சடலத்தை பொலிஸார் மீட்டனர். இது தொடர்பாக நடந்த விசாரணைக்குப் பின் 4 சிறுவர்களும் கைது செய்யப்பட்டனர்.(அ-9)

## திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

(தனங்கிளப்பு)

சாவகச்சேரி தெற்கு தச்சன் தோப்புப் பகுதியில் அண்மைக்கா லமாக திருட்டுச் சம்பவங்கள் அதி கரித்து வருகின்றது எனவும் வீதி யில் செல்பவர்கள் அணிந்து செல் லும் நகைகளும் அறுக்கப்பட்டு வருகின்றது.

இதனால் அப்பகுதி மக்கள் அவதானமாக இருக்கும் படி கேட் டுக்கொள்ளப்படுகிறார்கள். (து-37)


### A/L பௌதிகவியல்/இணைந்த கணிதம்

*பலவருடமாக மேற்படி பாடங்களை கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளுடன் மிகச்சிறப்பாக (20 வருடவினாத்தாள் உட்பட)கற்பிக்கப்படும். குறுகிய காலத்தில் முழுப்பாடத்திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும்*

*R.பாலசுப்பிரமணியம் (B.Sc. cey)*
*DIP-IN-ED*
*17/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.*
*T.P:NO:-077 6648751*
*(9735)*


### இராசிபலன்

**10.07.2005**
**(ஆனி 26, ஞாயிற்றுக்கிழமை)**
**சதுர்த்தி பின்னிரவு 01.17 மணிவரை**
**மகம் பின்னிரவு 03.03 மணிவரை**
**இராகுகாலம் 4.28 - 05.58 மணிவரை**
**சுபநேரம் 8.58 - 10.28 மணிவரை**
**சதுர்த்தி விரதம்**
**மாணிக்கவாசகர் குருபூசை**

| | |
|---|---|
| மேடம் | மனக்கவலை, எடுத்த கருமங்கள் தாமதமாகும், போசன சுகக்குறைவு, பணவிரயம். |
| இடபம் | அற்பர் உறவு, தன்னம்பிக்கைக் குறைவு, மாதா சுகம், புதிய சிந்தை. |
| மிதுனம் | இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, தொழில் முயற்சி, விருந்துபசாரம். |
| கடகம் | மதிப்புக் குறைவு, காரிய தாமதம், வீண் வார்த்தை, பண விரயம். |
| சிங்கம் | ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, சயன சுகம், புதிய முயற்சி. |
| கன்னி | பிதா சிந்தை, கோபப்படுதல், உறவினர் சந்திப்பு, காரிய தாமதம். |
| துலாம் | தெய்வசிந்தை, நல்ல காரியம், உறவினர் வருகை, மனமகிழ்ச்சி. |
| விருச்சிகம் | சுபநிகழ்ச்சி, கடின முயற்சி, அதிகாரம், போசன நன்மை. |
| தனுசு | புதிய திட்டமிடல், வயிற்றுக் கோளாறு, உடல் உழைப்பு, அச்சமான நிலை. |
| மகரம் | வீண் தொல்லை, காரிய தடங்கல், பணக் குறைவு, அபகீர்த்தி. |
| கும்பம் | எடுத்த காரியம் கைகூடும், உறவினர் வழி நன்மை, கீர்த்தி, உற்சாகம். |
| மீனம் | ஆரோக்கிய நிலை, திடீர் பயணம், நல்ல காரியம், விருந்துபசாரம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**- வளவன்**

## 40 ஆயிரம் பேருக்கு யுனிசெப் உதவி

(கொழும்பு)

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு யுனிசெப் நிறுவனம் 3 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவு பொருட்களை வழங்கியுள்ளதாக யுனிசெப்பின் இலங்கைப் பிரதிநிதி றெட்ஸ்ஹெயின் தெரிவித்துள்ளார்.

சமையல் பாத்திரங்கள், பாய்கள், விளக்குகள், சுகாதாரத்தைப் பேணும் பொருட்கள் உட்படப் பல்வேறு அத்தியாவசியப் பொருட்கள் இவ்வாறு வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார் இடைத்தங்கல் முகாம்களில் வாழும் சுமார் 40 ஆயிரம் பேருக்கு இத்தகைய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவைதவிர சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவும் அரச உத்தியோகத்தர்களின் பணிகளுக்கு உறுதுணையாக சுமார் 40 மோட்டார் சைக்கிள்களை தமது நிறுவனம் வழங்கியுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார். (க-60)

## சேதுசமுத்திரத்திட்டம், அயல் நாடுகளின் பூகோள விஞ்ஞானம் ஆராயப்படவேண்டும்

(கொழும்பு)

சேது சமுத்திர கால்வாய்த்திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கு முன்னர் தெற்காசிய நாடுகளுடன் கருத்து பரிமாற்றம் நடாத்தப்படுவது மிகவும் உசிதம் என்று இலங்கை வருகை தந்துள்ள நேபாள மன்னரின் விசேட பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் தொடர்பாக தெற்காசிய நாடுகளின் சுற்றாடல் பூகோள விஞ்ஞானம் தொடர்பாக ஆராயப்படவேண்டுமென நேபாள மன்னரின் விசேட பிரதிநிதி திபொக்ஸ் சர்மா தெரிவித்துள்ளார்.

சப்பிரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட பேச்சுவார்த்தையின் போது திபொக்ஸ் சர்மா இதனைத் தெரிவித்திருப்பதாக சப்பிரகமுவ மாகாண சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, ஹட்மண்டு ஆகிய நகரங்களில் சகோதர நகரங்களாக பெயரிட்டு அபிவிருத்தி செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்தப் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுள்ளது. மாகாண ஆளுநர் றெயிற் ரணதுங்கவின் அழைப்பை ஏற்று திபொக்ஸ் சர்மா இரத்தினபுரி மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு விஜயம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

### முன்னோடிப் புலமைப்பரிசில் பரீட்சை

கோப்பாய்கோட்டத்திற்கு உட் பட்ட தரம்-5 மாணவர்களுக்கான முன்னோடிப் புலமைப்பரிசில் பரீட்சையினை நடத்துவதற்கான ஒழுங்குகள மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். கோப்பாய் கோட்ட அதிபர்கள் நலன்புரிச் சங்கத்தினரால் இப்பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து.79)

### நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடல்

வல்வெட்டித்துறை வர்த்தக நிலையங்களது நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு 18,19,22 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த முத்திரையிடும் பணி 11,12,15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சேது சமுத்திரத் திட்டத்தால் பாதிப்பு மன்னார் மீனவர் ஆளுநரிடம் முறையீடு

(கொழும்பு)

சேது சமுத்திர கால்வாய்த் திட்டத்தை முன்னிட்டுப் பாக்கு நீரிணை ஆழப்படுத்தப்படவுள்ளதால் தாம் பெரும் பாதிப்புக்குள்ளாக நேரிடுமென வடக்கு-கிழக்கு ஆளுநர் டிரோன் பெர்னான்டோவிடம் மன்னார் மாவட்ட மீனவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

வடக்கு-கிழக்கு ஆளுநர் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் செய்த போது பேசாலை மற்றும் தலை மன்னார் மீனவர்கள் இந்த முறைப்பாட்டை முன்வைத்துள்ளார்கள்.

இந்தத் திட்டத்தின் காரணமாக மன்னார் கடற்பரப்பில் மீன் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படுமென மன்னார் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை, இந்திய மீனவர்களின் அத்துமீறல் காரணமாகவும் தமது மீன்பிடித்தொழில் பெரிதும் பாதிக்கப்படுவதாக ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவிடம் மன்னார் மாவட்ட மீனவர்கள் முறையிட்டுள்ளனர். (அ-9)

## புலிகளுக்கு நிதிக் கட்டுப்பாட்டுரிமை கதிர்காமருக்குப் பாரிய பின்னடைவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு அனைத்து நாடுகளிலும் பயங்கரவாதத்தின் நிமித்தம் தடைசெய்யப்படுவதற்குப் பிரதான காரணியாக லக்ஸ்மன் கதிர்காமர் அமைந்திருந்தார்.

இந்நிலையில் ஆழிப்பேரலையின் பொதுக்கட்டமைப்பு ஊடாக முழுமையான நிதிக் கட்டுப்பாடு உரிமை அரசாங்கத்தினால் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு வழங்கப்பட்டுள்ளமை வெளியுறவு அமைச்சருக்குப் பாரிய பின்னடைவாகும் என்று ஜே.வி.பியின் விமல் ரட்நாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுக்கட்டமைப்பின் ஊடாக இந்தியாவிற்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார். (அ-4,6,9)


### உடன் விற்பனைக்கு உண்டு

**பின்வரும் பொருட்கள் விற்பனைக்கு உண்டு**

- ஒவ்செற் பிளேற் (பாவித்தது)
- ஈய எழுத்துக்கள் மற்றும் ஈய லெற்றுகள் (புதியது)
- புத்தகம், கொப்பி என்பவற்றிற்கு கிளிப்பிடும் மெசின் (அச்சகங்களுக்குரியது, சிறிய திருத்தம் உண்டு)
- சிறிய ஜெனறேற்றர்
- ஈய எழுத்துக்கள் வைக்கப்படும் கேஸ் (பலகையினாலானது)
- கோழிக்கூடுகள் மற்றும் கதிரைகளுக்கான பாலைத்தடிகள்
- வெற்றுப் பைவர்கள் (6 லீற்றர்)

**மலிவான விலையில் வழங்கப்படும். பார்வையிடும் நேரம் தினசரி மாலை 4.00 மணிக்குப் பின்னர்.**

தொடர்பு:-
விற்பனை முகாமையாளர்
வலம்புரி
இல 3, 2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்)

# இன்று ஒரு தகவல்

## பணம் பாதகம் செய்யும்

ஒரு ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அந்த ஊரில் இருந்த் இளைஞர்கள் சிலரைக் கூப்பிட்டு வைத்து உபதேசம் செய்தார். "பணத்தை அறவழியில் தேடவேண்டும். தகாத வழியில தேடும் பணம் வந்த வழியிலேயே திரும்பிப் போய்விடும்" என்றார். "அது மட்டுமட்டுல்ல பணம் நண்பர்களைக் கூட விரோதிகளாக மாற்றிவிடும்" என்றார்.

இளைஞர்களில் ஒருவன் எழுந்தான். விபரம் தெரியாமல் பேசாதீர்கள் பெரியவரே என்றான். அவர் நிமிர்ந்து பார்த்தார். இதோ பாருங்கள் நாங்கள் நான்கு பேர் இருக்கிறோம். நாங்கள் நால்வரும் இணைபிரியாத நண்பர்கள். எந்தப் பணமும் எங்கள் நட்பை எதுவும் செய்து விடமுடியாது என்று சவால் விட் டான். பெரியவர் ஒன்றும் சொல்லவில்லை சிரித்துக் கொண்டே போய்விட்டார்.

அதனபின்பு ஒருநாள் வழக்கம் போல் இந்த நான்கு நண்பர்களும் ஒரு மலையடிவாரத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாகள். பக்கத்தில் ஒரு மலைக்குகை இருந்தது. அதனுள் ஒரு சாமியார் தியானம் செய்து கொண்டிருந்தார். ஒரு சமயம் கண்ணைத் திறந்து பார்த்தார். அவ்வளவு தான். அலறியடித்துக கொண்டு வெளியே ஓடி வந்தார். "சாவு என்னைத் துரத்துகறது. சாவு என்னைத் துரத்துகிறது" என்று சொல்லிக்கொண்டே ஓடி னார்.

இளைஞர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. "ஏன் இந்த சாமியார் இப்படிக் கத்திக்கொண்டு ஓடிவருகிறார்" என்று நினைத்துக் கொணடே குகைக்குள் போய்ப் பார்த்தார்கள். அங்கே போய் பார்த்தால் ஓர் ஆச்சரியம். விலை மதிக்க மூடியாத வைரங்கள, நகைகள், தங்கக் காசுகள் குவியல் குவியலாகக் கிடந்தது. இவ்வளவு பெரிய செல்வத்தைப் பார்த்துவிட்டு இந்த ஆள் இப்படி அலறியடித்துக் கொண்டு ஓடுகிறாரே" என்று நினைத்து அவருக்காகப் பரிதாபப்பட்டனர்.

அங்கே கிடந்த நகைகளையும் காசுகளையும் ஆசையாக கையால் அள்ளிப்பார்த்தார்கள். அந்த நால்வரும் "சரி...இதை இப்படியே நான்கு பங்காகப் போட்டால் ஆளுக்கு எவ்வளவு கிடைக்கும்?" என்று கேட்க ஆரம்பித்தான் ஒரு ஆள். நான் தான இதை முதலில் பார்த்தேன் அதனால் எனக்குக் கொஞ்சம் அதிக மாகக் கொடுப்பதுதான் முறை என்றான் ஒருவன். உனக்கு முதல் நான்தானே பார்த்தேன் என்றான் இன்னொருவன். கொஞ்சநேரம் ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டிருந்தார்கள்.

அதன்பின் ஆளுக்கு ஆள் அங்கே கிடந்த இருப்புக் கம்பிகளைக் கையில எடுத்து அடித்துக்கொள்ள ஆரம்பித்தார்கள். அதில் ஒருவன இறந்துவிட்டான். இன்னொருவனுக்குப் பல மான காயம். இறந்தவனைப் பார்த்ததும் மற்ற மூவரும் ஒரு சமரசத்திற்கு வந்தார்கள். "சரி நடந்தது நடந்துவிட்டது. இனி மேல் நடக்க வேண்டியதைப் பற்றி யோசிப்போம். இவன் செத்துப போனது யாருக்கும் தெரியாது. இவனை இங்கேயே புதைத்துவிடுவோம.நாம் மூன்று பேரும் இதை பங்கு போட்டுக் கொள்வோம்" என்ற முடிவுக்கு வந்தார்கள்.

அதற்குள் அவர்களுக்குப் பசிக்க ஆரம்பித்துவிட்டது. ஒருததனை சாப்பாடு வாங்குவதற்கு அனுப்பினார்கள். அவன் முத லில் தயங்கினான். திருமபி வருவதற்குள் இவர்களிருவரும் இருப்பவற்றை சுருட்டிக்கொண்டு ஓடிப்போய் விட்டால் என்ன செயவது என்ற தயக்கம்.இருந்தாலும் இந்த இரண்டு பேரும் அப் படியெல்லாம் செய்யமாட்டோம். தைரியமாகப் போய்வா என்று உறுதி கூறி அனுப்பினார்கள். அவன் போனான்.

அதன்பின் என்ன ஆயிற்று தெரியுமா? இங்கே அடிபட்டுக் கிடப்பவனுக்கு மூச்சுத்திணற ஆரம்பித்தது. "தண்ணீர்... தண்ணீர்"என்று கத்தினான். பக்கத்தில் இருந்தவன் அதைக்கண்டு கொள்ளாமல விட்டுவிட்டான். அவனும் செத்துவிட்டால் ஒரு பங்கு குறையும் என்ற நினைப்பு. அவனும் செத்துவிட்டான்.

சாப்பாடு வாங்கப் போன்வன் திரும்பிவந்து பார்த்தான். "இவன் எப்படிச் செத்துப் போனான்?" என்று கேட்டான். அடுத்த வன் பார்த்தான். இப்படித்தான் செத்துப்போனான் என்று கூறி அவனது தலையில் இரும்புக்கம்பியால் ஓங்கி அடித்தான். அவ்வளவு தான் சாப்பாடு வாங்கி வந்தவனும் செத்துப்போய் விட்டான். இப்போது இருபது ஒரே ஆளதான். 'அப்பாடா தொல்லை விட்டது' என்று நினைததான். அவசர அவசரமாக அவன் வாங்கிக் கொண்டு வந்த சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு நகைகளை மூட்டை கட்டிக் கொண்டு கிளமபினான்.

அவ்வளவுதான் தலை கிறுகிறுவென்று சுற்றியது. கண் கள் இருண்டு மயங்கிக்கீழே விழுந்தான். அவனும் செத்துவிட்டான். என்ன நடந்தது தெரியுமா? சாப்பாடு வாங்கப் போனவன் அதில் விஷத்தைக் கலந்துகொண்டு வந்திருக்கிறான் இவனைக் கொல்வதற்கு. கடைசியில் அந்தச் செல்வம் கேட்பாரறறுக்கிடந்தது. அத்ற்காக்ப் போட்டி போட்டவர்கள் அதை அடைய முடியாமல் அழிந்து போனார்கள்.

பணம் நண்பர்களைக் கூட விரோதிகளாக மாற்றி விடும் என்று அந்தப் பெரியவர் சொன்னது எந்தளவுக்கு உண்மையாகிப் போனது பார்த்தீகளா? வாழ்க்கைக்குப் பணம் அவசியம் தான் இல்லை என்று கூறவில்லை இருந்தாலும் அதை முறையாக சம்பாதித்து முறையாகப் பயன்படுத்தவேண்டும்.அது தான் நாம் தெரிந்து கொள்ளவேண்டியது.

என்னுடைய நண்பன் ஒருவனிடம் நான் இந்தக் கதையைக் கூறிவிட்டுக் கேட்டேன் "ஏனப்பா? நாமிருவரும் கடற்கரைக்குச் செல்வதாக வைத்துக்கொள்வோம்.அங்கே மணலில் ஒரு தங்க மோதிரம் கிடக்கிறது. அதைப் பார்த்ததும் நான் எடுதது உன்னிடம் கொடுககிறேன். அந்த மோதிரம் நமது ஆழ்ந்த நடபைப் பிரித்து விடுமென்று நீ நினைக்கிறாயா?" என்றேன்.'பிரிக்கின்ற அளவுக்கு நீங்கள் நடந்துகொள்ள மாட்டீர்கள்' என்றான்.'எப்படி?' என்றேன். "உங்கள கண்ணில் அதுபட்டால் அதன்பின் அதைப்பற்றி என்னிடம் வாயைத் திறந்து சொல்லவே மாட்டீர்களே? அதன்பின் எப்படி நமக்குள் சண்டை வரும் ?" என்கிறான் அவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

---

## ஜாதிக ஹெல உறுமய அமெரிக்காவுக்குக் கடிதம்

# பொதுக்கட்டமைப்பு மூலம் 60 சதவீத நிதி தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகளுக்கு

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண சபையினால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் குறித்து விளக்கி ஜாதிக ஹெல உறுமய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் கடந்த 5ஆம் திகதி இக் கடிதத்தை அமெரிக்கத் தூதுவரிடம் கையளித்தார்.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுக்கும் இடையே கடநத 5ஆம் திகதி மாலை அமெரிக்கத் தூதரகத்தில் சந்திப்பு நடைபெற்றது.

ஆழிப்பேரலை நிவாரண சபையினால் ஏற்படக்கூடிய அனர்ததங்கள் தொடர்பாக இந்த சந்திப்பின் போது ஜாதிக ஹெல உறுமயவினர் அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுக்கு விளக்கினர்.

ஜாதிக ஹெல உறுமய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷஷிறகு அனுப்பிய கடிதத்தில், சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கைகளை பாராட்டியுள்ளது.

ஆழிப்பேரலை நிவாரண சபையின் ஊடாக வழங்கப்படும் நிதியின் 60 சதவீத நிதி அமெரிக்காவினால் தடைசெய்யப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கே வழங்கப்படுகிறது என்று இந்தக் கடிதத்தில் ஜாதிக ஹெல உறுமய சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த சந்திப்பில் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித தேரரும் கலந்துகொண்டார். (அ-4)

## வாழைச்சேனையில் இளைஞர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

வாழைச்சேனை பால நகரில் கடந்த புதன்கிழமை இரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் தியாவெட்டுவானைச் சேர்ந்த நயிந்தன் செல்வராசா (வயது-27) என அடையாளம காணப்பட்டுள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தனது வீட்டில் இரவு உணவை உட்கொண்ட பின்பு காட்டுப்பாதை வழியாக வெலிக்கந்தைட் பக்கமாகச் சென்றுகொண்டிருந்த சமயம் வழிமறித்த இனந்தெரியாத நபர்கள் ரி- 56ரக துப்பாக்கி மூலம் இவரை சுட்டுக்கொன்று விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

குறிப்பிட்ட நபர் கருணா குழுவுடன் தொடர்புடையவர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். கருணா குழுவைச் சேர்ந்த இவருடைய தம்பி நயிந்தன் குணராசா (வயது-23)வும் கடந்த வருடம் ஒகஸ்ட் மதாம் 23ஆம திகதி சுட்டுக் கொல்லப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-4)

## மக்களின் துயரங்களை வைத்து இலாபமீட்டுவதற்கு சிலர் முயற்சி

(கொழும்பு)

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்ப துயரங்களை தமது இலாபத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ள சிலர் முயற்சிப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களின் வாழக்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதே சிறந்தது எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்துருவ,நெலும்பொக்கன கிராமத்தில் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் நலன்கருதி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்என பிரதமர் கோரிக்கை விடுத்தார். (க-4)

## அலங்கார உற்சவம்

(கோப்பாய்)

கோபபாய் பலானை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி இரதோற்சவமும் 21ஆம திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-79)

# நிவாரண நிதி சம்பந்தமாக பிரதமர் என்ன நடவடிக்கை எடுத்தார்?

## விசாரணை செய்ய வேண்டும் என்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரணத்திற்கென கிடைத்த நிதி சம்பந்தமாக பிரதமர் எடுத்த நடவடிக்கை குறித்து விசாரணை நடாத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ என உள்நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்தும் கிடைத்த சுமார் 82 மில்லியன் ரூபா பணம் சம்பந்தமாக பிரதமர் எடுத்துளள நடவடிக்கைகள் என்னவெனபது குறித்து விரிவான விசாரணைகளை நடாத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதியிடம் வேண்டுகோள விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாபெரும் மக்கள் பேரணியில் கலந்துகொண்ட அக்கட்சியின் பாராளுமன்ற உறுபபினர்கள் நேற்று முன்தினம் இக் கோரிக்கையினை விடுத்துள்ளனர்.

82 மலலியன் ரூபா பணம் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அமைச்சரவையின அனுமதியை பெற்றுள்ளாரா? இல்லையா? என்பது பற்றி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதுவரை எதனையும தெரிவிக்கவில்லை.

அததுடன், ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து ஏழு மாதங்கள் கடந்துள்ளபோதிலும் இதுவரை அந்தப் பணத்தை எவ்வித நிவாரண நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தாதது ஏன் என்ற கேள்வியும எழுகிறது என கட்சியின பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (க-4)

# திருப்பத்தை ஏற்படுத்திய கறுப்பு யூலை

மா.க.ஈழவேந்தன்

யூலை மாதம் ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலே மிக முக்கியத்துவம் வாய்ந்த மாதமாகும். இதற்குக்காரணம் 1987ஆம் ஆண்டு யூலை மாதம் 5ஆம திகதி, வரலாற்றிலே ஒரு திருப்பு முனையை ஏற்படுத்துகின்ற முறையிலே மில்லா நடாத்திய புரட்சியே ஆகும். அந்த நிகழ்வின் நாள் தான் "கருமபுலிகள் தினம்" ஆகும்.

அதனைத் தொடர்ந்து 1995ஆம் ஆண்டு யூலை 10ஆம திகதியன்று நவாலி தேவாலயம் குண்டுத் தாக்குதலுக்குள்ளான நிகழ்ச்சி, பொதுமக்கள் சாகடிக்கப்பட்ட நிகழ்ச்சி, அத்தோடு முருகன் கோவில் எரிக்கப்பட்ட நிகழ்சசி முதலியன நடைபெற்றன.

அதேபோன்று 1983ஆம் ஆண்டு யூலை மாதம் 23,24,25 ஆம் திகதிகளில் பூரண பாதுகாப்புக்கு மத்தியிலே அமைந்திருக்கும வெலிக்கடைச் சிறையிலே 55 அரசியல் கைதிகள் கொலை செய்யப்படடார்கள். அவர்கள் "கிரிமினல் குற்றம" செய்தவர்கள் அல்லர். இதைப் பற்றிக் கேட்ட போது அன்று ஜே.ஆர். ஜயவர்தன "**I do not know how that happened**" அதாவது தனக்குத்தெரியாது என்று கூறினார். அவர்களுடைய வீட்டில் இருந்து வெலிக்கடை சிறைக்கு ஏறக்குறைய இரண்டு மைல் தொலைவு தான்.அப்படியிருந்தும் தனக்குத் தெரியாது என்று கூறினார். இததகைய தொல்லைகளை எதிர்நோக்கிய நிலையில் தான் யூலை மாதம் புரட்சிகரமான மாதமாக "கறுப்பு யூலை"யாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஜே.ஆர். ஜயவர்தனவை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து வருமளவிற்கு இலங்கை அரசியலிலே தமிழர் வரலாற்றிலே ஒரு பெரிய மாற்றத்தை- திருப்பு முனையை ஏற்படுத்தியது.

உலகின் கவனத்தையே ஈர்க்கும் அளவிற்கு அமைந்தது. நெல்லியடியில் இடம்பெற்ற அந்தத் தாககுதல் நிகழ்ச்சி தான் என்பதை நினைவு கூற வேண்டியது அவசியம்.

தமிழீழத்திலேயே மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் விளைவாகவே 2245 குடும்பங்களைச சேர்ந்த 8558 எண்ணிக்கையான மக்கள இன்னமும் நலன்புரி முகாம்களில் வாழ்கின்றார்கள்.அங்கு இராணுவத்தினர் தொடர்ந்து இருக்கும் வரையில் இந்த நிலை தொடரும்.

எனவே அகதிமுகாம்களில் கிடந்து அல்லறபடும் இடம்பெயர்நத மக்கள் அவர்களது நொந்த இடங்களில் குடியமரும் நிலை விரைவில் ஏற்பட வேண்டும்.

# களம் இறங்குகிறார் கங்கை அமரன் வாரிசு

நடிகர், நடிகை, தயாரிப்பாளர், இயக்குனர்களின் வாரிசுகள் திரைப்படத்துறையில் காலடி எடுத்து வைப்பது நடைமுறையாகி விட்டது. இதுபோல இசை அமைப்பாளர்களின் வாரிசுகளும் திரை உலகில் புகுந்து கலக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இளையராஜாவின் மகன்கள் கார்த்திக் ராஜா, யுவன் சங்கா ராஜா, மகள் பவதாரணி ஆகியோர் ஏற்கனவே படங்களுக்கு இசை அமைத்து வருகிறார்கள். இந்த வரிசையில் இப்போது இசை அமைப்பாளர் கங்கை அமரனின் மகன் பிரேம்ஜ'யும் இசை அமைப்பாளர் ஆகிறார். அருண்குமார் நடிக்கும 'துணிச்சல்' படத்துக்கு இவர் இசை அமைக்கிறாா.



'காதலர் கொண்டாட்டம்'
எபிகுஞ்சுமோன் - ஷர்மிலி



'ப்ரிய சகி'
மாதவன் - சதா

# குஷ்பு, சரிதாவுடன் மாறுபட்ட வேடத்தில் ஜோதிகா

ஐடியா ஓல்ட் - 1 செல்லுலாய்ட் லிமிடெட் என்ற பட நிறுவனத்தின் சார்பில் ஏ. அன்சாரி தயாரிக்க ரேவதி எஸ். வர்மா என்ற பெண் இயக்குனர் இயக்கும் புதிய படம் 'ஜ"ன்.ஆர்'. விளம்பரப் படத் துறையில் முன்னணி இயக்குனரான இவர் இயக்கும் முதல் படம் இது.

ஜோதிகா, குஷ்பு, சரிதா நடிக்கும் வித்தியாசமான கதை அம்சம் கொண்ட படமாக உருவாகிறது.


'ஜ"ன். ஆர்' படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கும் ரேவதி எஸ். வர்மா, 1991 முதல் விளம்பரப்படங்களை இயக்கி வருகிறார்.

தேசிய விருது பெற்ற பிரபல மலையாளப்பட இயக்குனர் கே. ஆர். சுபாசின் மனைவி இவர். இந்தப் படம் பற்றி அவரிடம் கேட்ட போது,

இது என்னோட வாழ்க்கையில் நடந்த கதை. ஜாலியாகவும், கொஞ்சம் வலிக்கிற மாதிரியும் கொஞ்சம் கற்பனை கலந்து பண்ணியிருக்கேன் என்று சொன்னார்.

அதென்ன ''ஜீன் . ஆர்'? என்று கேட்டதற்கு,

ஜ"ன் என்பது ஜோதிகாவின் கரக்டர் பெயராம் 'ஆர்' க்கு அழுத்தமான காரணம் உண்டு என்று சஸ்பென்ஸ் வைக்கிறார் இயக்குனர்.



சரி... அப்படி என்ன தான் கதை? பெண்கள் தனித்து நின்று வாழ்க்கையில் ஜெயிக்கிற கதை. வெவ்வேறு விதமான சூழலை எதிர்கொள்கிற மூன்று பெணகள். இவர்களுக்கு நடுவே இன்னொரு ஹீரோவும் இருக்கிறார் என்றார்.

படத்தில் குஷ்பு மாறுபட்ட வேடத்திலும், சரிதா ஜோதிகாவின் அம்மாவாகவும் நடிக்கிறார்கள். இவர்களுடன் மணிவண்ணன், சந்தானம் ஆகியோரும் நடிக்கின்றனர்.

ஒளிப்பதிவு: மது அம்பர்ட், இவர் சர்வதேச அளவில் பிரபலமானவர். இசை: ஷரத் -மலையாளத்தில் 30 க்கும் மேற்பட்ட படங்களில இசை அமைத்திருக்கிறார். தமிழில் இது முதல் படம். கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்: ரேவதி எஸ். வர்மா, தயாரிப்பு: ஏ. அன்சாா'.

# ஆர்ப்பரிக்கும் ...

'பம்பரக்கண்ணாலே' ப...
மூலம் தமிழ்ப்பட உலகில் காலடி...
வைக்கிறார் ஆர்த்தி அகர்வால்.
தெலுங்கில் பிரபலமான இவ...
பிரச்சினையில் சிக்கி தற்கொ...
சென்று மீண்டுள்ளார். இனி தமிழ்...
ஒரு கலக்கு கலக்காமல விட மா...
என்கிறார்.
'வின்னர்' படத்தில் எனக்கு...
கிடைத்தது. ஆனால் நழுவவிட்டு...
ணாலே' படத்தில் ஸ்ரீகாந்துடன்...
இதன்மூலம் தமிழ்ப பட உ...
அடித்துச் சொல்கிறார் ஆர்த்...



ஜீன் - R
- ஜோதிகா

# புதிய காதல் ஜோடி

தமிழ்ப் பட உலகில் காதலில் சிக்கித் தவிக்கும் புதிய ஜோடி ஜெய் ஆகாஷ் – பிரணதி.



'குருதேவா' படத்தில் ஜோடி சேர்ந்தபோது அரும்பிய காதல இப்போது வேர்விட்டு வளர்ந்திருக்கிறதாம்.

'காற்றுள்ளவரை' யில் நடித்த போது இந்த நெருக்கம் அதிகமாக இருக்கிறது. உள்ளூரில் மட்டுமல்ல வெளியூரிலும் கைகோர்த்துத் திரிந்த இவர்கள் சமீபத்தில் வெளிநாட்டுக்கும் டூர் போய் விட்ட வந்ததாக கோடம்பாக்க வட்டாரம் கூறுகிறது.

ஆனால் காதல் ஜோடி இதை மறுத்துள்ளது.

கத்தரிக்காய் முற்றினால்......?

# தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பை கூற வருகிறது 'உணர்ச்சிகள்'

தே.ஆர். கிரியேஷன்ஸ் நிறுவனம் தயாரிக்கும புதிய படம் 'உணர்ச்சிகள்'

ஸ்ரீமன், குணால், அப்பாஸ், ராதாரவி, ரஞ்சிதா, மனோரமா, அபிதா, ஷகிலா, சண்முக சுந்தரம், மயில்சாமி, முத்துக்காளை, லட்சும', திவ்யா, அஜிபாலா ஆகியோர் நடிக்கிறார்கள்.

திருமணம் ஆன பெண்களும், திருமணம் ஆகாத இளம் பெண்களும் உணர்ச்சிகளைக கட்டுப்படுத்த வேண்டும். தியானம், தெய்வ பக்தி, குடும்ப பாசம் ஆகிய உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தமிழ்ப்பண்பாடு, கலாசாரம் தான் உலகில் சிறந்தது என்பதை எடுததுக் காட்ட வேண்டும் என்பதே கதையின் கரு.

இந்தப் படத்தின் கதை, திரைக்கதை, வசனம், தயாரிப்பு, டைரக்ஷன் பொறுப்புகளை கே. ராஜன் ஏற்றுள்ளார்.

ஒளிப்பதிவு: ரவீந்தர், இசை: ஆர். கே. சுந்தர், பாடல்கள்: பிறைசூடன், கிருதியா, தயாரிப்பு நிர்வாகம்: சி. கே. சரவணன், எடிட்டிங்: சுபாஷ். இந்தப்படம் செப்டம்பர் மாதம் திரைக்கு வரவுள்ளது.

## சினிமாச் சிதறல்



'பம்பரக்கண்ணாலே'
நமீதா - ஸ்ரீகாந்த்

# 'விஜய், வி...
# பொறாமையா...

தமிழ், இந்திப் பட உலகில்...
தனிப் பாணியைக் கடைப்பிடிக்கு...
குச சிறிய இடைவெளிக்குப் பிறகு ம...
சகி', 'தம்பி' ஆகிய படங்கள் வெவ...
இந்த தாமதத்துக்குக் காரணம் என்ன,...
டின் மற்ற ஹீரோக்கள் பற்றி என்ன நினை...
எனற கேள்விகளுக்கு அவர் அளித்த...
என்னுடைய படம் வித்தியாசமா...
வேண்டும என்பது ரசிகர்கள் எதிர்ப்ப...
வித்தியாசமான கதையைத் தேர்ந்தெடு...
மட்டுமே கொடுக்க வேண்டும் என்று...
'காதல்' படம் திறமையை மட்டும்...
கோடி முதலீடு செய்தால் 10 கோடி...
எனவே எந்தப் படததை எடுத்தாலும்...
அப்போதுதான் படம் நன்றாக ஓ...
என்னை 'சாக்லேட் ஹீரோ' வக...
ரசிகர்கள் – ரசிகைகள இருக்கிறங்க...
யும எல்லாவிதமாகவும நடிக்க முடி...
னைத தயார் செய்றேன்.
நான் விஜய், விக்ரம், அஜீத், சூா...
டியதைச் சரியாகச் செய்து வெற்றிப்ட...
டானஸ் ஆட வந்தா அசத்துவேன். வி...
றாக நடிக்கிறாா. சூர்யா – அவர் நடிக்கும்...
ரவி, சிம்பு, தனுஷ் எல்லோரும் திற...
தால் பொறாமையாகத்தான் இருக்...
நானும் எனது தனித் தன்மைய...
நடிச்ச 'பரிய சகி', 'தம்பி' ஆகிய பட...
ரசிகர்களின் எதிர்ப்பார்ப்பை நிறை...
இப்படிச் சொல்பவர் மாதவன்.

# பொய்யில் கிடந்து புரளாதே போவோம் காலம் வந்தது காண்!

## பொய்விட்டு உடையார் கழல்புகவே

திருப்புகழ் ஆய்வாளர், திருவாசகமணி க.மாணிக்கவாசகர்

ஒரு வாசகத்திற்கும் உருகாதார் மனதையும் உருக வைக்கும் திருவாசகத்தையும் திருக கோவையாரையும் திருவாய் மலர்ந்தருளிய மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசைத்தினம் இன்றாகும். (10.07.2005) ஆனிமாதம் மகாமகத்தில் மாணிக்கவாசகர் தில்லைக் கூத்தனோடு அத்துவிதக்கலப்பெய்திய அற்புத நிகழ்ச்சி திருவாதவூரர் புராணத்தில்,

"நின்ற புகழ் புகழியூரார் நேர்மையுடன் புடைசூழ
சென்றருளுக்கிடமான செம்பொன்னின் அம்பலமெய்தி
ஒன்றிய இத் தமிழ் மாலையின் பொருள் இவரென உரைசெய்து
மன்றில் கடிதேகி மறைந்தார் காண் பலர் காண" என்னும் பாடலும்,

"செய்காட்டும் கழுகடவித் தில்லையுளார் பொருட் கேட்க கைகாட்டித் தன் உருவம்
காட்டா மறைந்தாரை பைகாட்டும் பேரரவப் பூணுடையோன் தமக்கன்பு
மெய்காட்டி பாலுடன் மேவிய நீராக்கினார்" என்னும் பாடலும் எடுத்துக் காட்டுகின்றன.

திருவாசகமும், திருக்கோவையாரும் மாணிக்கவாசகர் சொல்லத் தில்லைக்கூத்தர் எழுதிய பெருமையும் பெருஞ்சிறப்பும் கொண்ட நூல்களாகும். "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" எனத தில்லை நடராஜன் பணிக்க மணிவாசகர் பாடினார் என்பதைத் திருவாதவூரடிகள் புராணத்தில்,

"மெய்த்தவ வாதவூரர் விரும்பி எழுதும் இப்புத்தகம்
மன்றில் ஆடல் புரிந்தவன் எழுத்தாம் என்று
முத்தியை உதவும் கோவை முடிவிடத்து பின்னர்
சித்திர மலர்க் கையாலே திருத்தமைக் காப்பும் செய்தார்" என்ற பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

திருவாசகம் 51 பதிகங்களைக் கொண்டது. சிவபுராணம் முதல் அச்சோபபதிகம் வரையான 51 பதிகங்களையும் மனனம் செய்பவர்கள் மரண பயம் இல்லாமல் பெருவாழ்வு வாழலாம். சைவ சமயத தலைவர்களாக இருப்பவர்கள் திருவாசக நிறைவு பெற்றிருத்தல் அழகாகும்; அவசியமும் ஆகும்.

"சைவனுக்கு அழகு திருவாசகம் படித்தல்; அது ஏழேழு பிறவிகளுக்கும் உறுதுணையாக நிற்கும்" எனச் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் சிவபாதசுந்தரனார் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

திருவாசகத்தின் 51 பதிகங்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் திருவாசகத்தின் பெருமையை அவனியெங்கும் பரப்பியவர் ஜீ.யு.போப் பாதிரியார் ஆவார். அவரது திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்பு வெளிவந்த பின்னரே எமது சைவத் தமிழர்கள் திருவாசகத்தின் பெருமையை உணர்ந்து அதனைப் படிக்க ஆரம்பித்தார்கள் என்றும் கூறுவர்.

திருவாசகத்தை நன்றாக, அனுபூதி மார்க்கமாக அனுபவித்தது மாத்திரமல்லாமல் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் பாடும் பணி செய்தவர் அவர். அவரது பணியால் மேற்கத்திய நாடுகளுக்கும் திருவாசகத் தேன் ஒலி பரவியது.

திருவாசகத்திற்கு அவர் ஆங்கிலத்தில் அளித்துள்ள விளக்கம் ஆணித்தரமானது.

"There are a few poems in any Language that can surpass. Thiruvsagam, the holy word of Lord Manickvasagar in Profoundity of thoughts. simplicity, feeling child like admosphere finally finds its shelter."

சிவனும் சீவனும் - தலைவனும் தலைவியும் - பேரின்ப புணர்ச்சியில் திளைத்தல் பற்றி:ப சிறப்பியல்புகளை விளக்குவதாக அ:மைந்துள்ள திருக்கோவையார் 25 பதிகங்களைக் கொண்டது. இயற்கைப் புணர்ச்சி தொடங்கி பரத்தைப் பிரிவு வரை இது அமைந்துள்ளது. இவற்றில் முக்கியமானது 19 ஆவது பதிகமான மணம் சிறப்புரைத்தலாகும். திருமணம் வாழ்க்கைக்கு உகந்தது போலப் பேரின்ப நிலை உடைத்ததாக அதனை அமைத்திருக்கிறார். திருமணச் சிறப்பு 9 பிரிவுகளாக சீராக்கப்பட்டுள்ளது.

'மனம் முரசு கோரல், மகிழ்ந்துரைத்தல், வழிபாடு, வாழ்க்கை நலம் கூறல், காதல் கட்டுரைத்தல், கற்பறிவித்தல், காதலர் கண் மருகுதல், கலவி உரைத்தல், ஆகிய ஒன்பதும் நலமிகு மணமிசை யாங்குகாலே'

பேரின்பப் புணர்ச்சி இன்பத்தைக் கூறும்போது ஈருடல் ஓருயிர் என்பதைத் தெளிவாக்கியிருக்கிறார்.

'ஆனந்த வெள்ளத்தில் அழுந்துமோர் ஆருயிர் ஈருருக் கொண்டு
ஆனந்த வெள்ளத்திடை திளைத்தார் ஒக்கும் அம்பலம் சேர்
ஆனந்த வெள்ளத் தறை கழலோன் அருள் பெற்றவர்
ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாது இவ்வணி நலமே!'

மாணிக்கவாசகருக்கு நாம் செய்யும் கைமாறு திருவாசகம், திருக்கோவையார் ஆகிய நூல்களை அனுபவித்து சிவானுபூதியர்களாக வாழ்வதேயாகும். அதன் மூலம் பேரின்ப நிலையை அடைந்திடலாம்.

வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் ஆழ அகல கற்றுணர்ந்தவர். 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்ற மணிவாசகரின் கூற்றின் உண்மையை உணர்ந்தவர். திருவாசகத்தை அதன் உள் அர்த்தத்தில் கலந்து பாடவேண்டும் என்கிறார்.

'வான் கலந்த மாணிக்கவாசக நின் மணிவாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து நெய் கலந்து தித்திக்கும் பால் கலந்து
ஊன் கலந்து உயிர் கலந்து
உவட்டாமல் இனிப்பதுவே'

"வாதவூரனை மதித்தொரு கால் ஒரு குருக்கள் என
ஞானபாதம் வெளியிட்டு நரியிற் குளுவை
வாதியாம் என நடத்துபவை அரசர் அன்புக்காக
மாடை ஆடை தர பற்றி முன் நகைத்து
வைகை ஆற்றின் மீது நடமிட்டு
மண்ணெடுத்து மகிழ்மாது வாணியொரு பிட்டமுது
பித்தனருள் நுகர் கந்தவேளே! - அருணகிரிநாதர் "

திருவாசகத்தில் 45 ஆம் பதிகம் யாத்திரைப்பத்து. இதனை சைவ சமயத்தவர்கள் ஒவ்வொருவரும் மனனம் செய்யவேண்டும். 'பூவார் சென்னி மன்னனும் புயங்கப் பெருமானும்' என்று தொடங்கும் பதிகம் பிறவிப் பயனை அடைய பெருமானிடம் யாத்திரை செய்யவேண்டியதன் அவசியத்தை உணர்த்தி நிற்கிறது.

இந்த யாத்திரைப்பத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த போப் பாதிரியார் அதனைக் கிறிஸ்தவ தேவாலயங்களிலே அகமகிழப் பாடி பேரானந்த வெள்ளத்தில் திளைத்தார் என்பதை அவரது வாழ்க்கை வரலாற்றில் இருந்து அறியக் கூடியதாக இருக்கிறது.

யாத்திரைப்பத்திலே,

'விழுமின் வெகுளி வெளுத்த நோய் மிகவோர் காலம் இனி இல்லை' என்ற பாடலைக் கீழ்வருமாறு ஆங்கிலத்திலே அழகாகக் கூறியுள்ளார்.

Free ye your souls from pains of wrath and lust. hensforth the time shall not be long drawnout. Beneath our materfeet with glad and acclaim. And that we in one may go in combine.

Even in sivan's town shall refuge find whose flower wreath gates shall not be closed. And that we in eclacy shall sing glowers of our pugayan King.

51 பதிகங்களைக் கொண்ட திருவாசகத் தேனை மாந்தி மகிழ்ந்து தில்லைக் கூத்தன் திருவடி அடைய முயல்வோமாக!

'அத்துவிதப் பொருள் காப்பான் எனக்கானந்தமான பராபரன் காப்பான்
சிற்றரும் தேவரும் காப்பான் என் சித்தத் திரங்கிய திருவாசகம் என்னும் தேன் காப்பான்'

'பொய்யிற் கிடந்து புரளாதே போவோம் காலம் வந்தது தான் பொய்விட்டு உடையான் கழல் புகவே' என்ற யாத்திரைப்பத்தை ஓதி உணர்ந்தவர்களைச் சாராது இடர்.

அனுசரணை:- சிறிமுருகன் ஜுவலர்ஸ், நியூ கல்யாணி ஜுவலர்ஸ், வி.எம்.கே.ஜுவலர்ஸ், கே.கே.கந்தையாபிள்ளை

## புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சில் 535 பேருக்கு உடன் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளில் ஒரு தொகுதியினருக்கு நிவாரணம் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சில் வேலைவாய்ப்பு வழங்கப்பட வுள்ளது.

இதன்படி 535 பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் குறிப்பிட்ட அமைச்சின் கீழ் அபிவிருத்தி உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த முதலாம் திகதி தொடக்கம் செயற்படும் வகையில் இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் வடக்கு - கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் வடகிழக்கின் எல்லைப்புற மாவட்டங்களிலும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழ்மொழி மூலம் 358 பேரும் சிங்களமொழி மூலம் 177 உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். (க-8)

## வவுனியா - கொழும்பு இடையே தனியார் பஸ்சேவை நிறுத்தம்

(கொழும்பு)

ஓமந்தையில் இருந்து புத்தளம் ஊடாக கொழும்பை நோக்கி வந்த தனியார் பஸ் சாரதியும் நடத்துநரும் புத்தளம் பகுதியில் வைத்துத் தாக்கப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்து நேற்றுமுன் தினம் வவுனியா, கொழும்பு தனியார் பஸ்சேவைகள் பாதிப்படைந்தன. சாரதியும் பஸ்நடத்துநரும் தாக்கப்பட்டமையைக் கண்டித்து நேற்றுமுன்தினம் நண்பகலுக்குப் பின்னர் பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை.

பஸ்கள் போக்குவரத்தில் ஈடுபடாமையினால் பயணம் செய்யவிருந்த பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கினர். தமது பயணங்களை மேற்கொள்ள முடியாமல் பயணங்களைக் கைவிட்டனர்.

கடந்த வியாழக்கிழமை புத்தளத்தில் வைத்துத் தனியார் பஸ் சாரதி, நடத்துநர் காரணமின்றித் தாக்கப்பட்டமை தெரிந்ததே.(க-8)

## லண்டன் நலன்புரிக் கழகம் காரைநகருக்கு அன்பளிப்பு

(காரைநகர்)

லண்டன் நலன்புரிக் கழகம் 30 இலட்சம் ரூபா பெறுமதியான தண்ணீர் பௌசர் ஒன்றைக் காரைநகர் மக்களுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தண்ணீர் பௌசர் காரைநகர் அபிவிருத்திச் சங்க அலுவலகத்தில் அண்மையில் கையளிக்கப்பட்டதையடுத்து இப்பிரதேச மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கான தீர்வு காணப்பட்டிருப்பதாகவும் இந்த பௌசர் மூலம் 324 குடும்பங்களுக்கு நீர் விநியோகிக்கப்பட்டு வருவதாகக் காரைநகரப் பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-7)

## லண்டனில் குண்டு வெடிப்பு; ரணில் விக்கிரமசிங்க கண்டனம்

(கொழும்பு)

லண்டனில் அப்பாவி மக்களை இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

லண்டனில் இடம்பெற்ற பயங்கரவாத சம்பவத்தைக் கண்டித்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பாவி மக்களை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட இச் சம்பவத்தை நான் அறிந்தவுடன் மிகவும் கவலையடைந்தேன். இந்தத் துயரமானவேளையில் பிரித்தானிய மக்களுக்கு எனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

## 20 வருடங்களுக்கு மேல் திருத்தப்படாத பாதை

### வடமராட்சி கிழக்கு மக்கள் கவலை

வடமராட்சி கிழக்கில் சுனாமிக்கு முன்பும் சரி, பின்பும் சரி வீதிகளைத் திருத்துவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை காட்டுவதில்லையென மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

மருதங்கேணியிலிருந்து வெற்றிலைக்கேணிக்குச் செல்லும் சுமார் 12 கிலோமீற்றர் நீளமான பிரதான பாதை 20 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாததால் குன்றும் குழியுமாக மக்கள் பயணம் செய்ய முடியாத நிலையில் உள்ளது.

இதனால் பேருந்துகள், பார ஊர்திகள் மாத்திரமல்ல, உந்துருளி போன்ற சிறிய வாகனங்களும் செல்ல முடியாதிருப்பதாகவும் சைக்கிள் போன்ற வாகனங்களில் செல்லுவோர் இடையிடையே இறங்கி உருட்டிக் கொண்டு தான் போக வேண்டியிருக்கிறது என்றும், இதனால் பாடசாலை மாணவர்கள், தொழிலுக்குச் செல்பவர்கள் நேர காலத்துடன செல்ல முடியாதிருப்பதாகவும் தெரிகிறது. இக் குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு உதவி அரசாங்க அதிபர், அரச நிதிமூலமோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமோ இவ் வீதியைத் திருத்த உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று மக்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

மூன்று மாத காலத்துக்கிடையில் இவ்வீதி திருத்தப்படாவிட்டால் மாரி மழை ஆரம்பமாகி விடுமென்றும் அதனால் மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களுக்காளாக வேண்டி வருமென்றும் அவர்கள் மேலும் தெரிவிக்கிறார்கள். (து)

## நிர்வாகிகள் தெரிவு

(பொன்னாலை)

யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசப் பொதுக் கூட்டமும் - புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் 7 பேர் கொண்ட புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டது.

தலைவராக சி.குமாரவேல், உப தலைவராக கி.சுப்பிரமணியம், உறுப்பினர்களாக ந.சசிகுமார், இ.கணபதிப்பிள்ளை, மா.செல்வராசா, செ.செல்வராசா, இ.பாலையா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ற-49)

## சிவதொண்டன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தின் யூலை மாத சிவதொண்டன் இதழ் வெளிவந்துள்ளது. (அ)

# விவாகரத்து வழக்கும் அதன் தாற்பரியங்களும்

**2**

ஆலோசனைகள் மூலம் திருமணத்தை மீளமைக்கலாம் என்பதற்கான சாத்தியக் கூறு இருப்பின் நீதிமன்றம் சான்றுகளை (Evidence) பதிந்ததன் பின் வழக்கு நடவடிக்கையை ஆறு (06) மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கு ஒத்திவைக்கும். இங்கு விவாகரத்து வழங்குவதற்குரிய தனிப்பட்ட காரணியாக சோரம் (Adultry), வன்ம உறவறுப்பு (Malicious desertion), மலட்டுத் தன்மை (Importancy) என்பவற்றில் ஒன்றை மட்டும் காரணமாகக் காட்டலாம். ஏனைய காரணங்கள் இவற்றில் ஒன்றோடு கூட்டுக்காரணிகளாகவே அமையும்.

பதினெட்டு (18) வயதுக்குட்பட்ட பராய மடையாத பிள்ளைகளின் சான்று (Evidence) விவாகரத்துத் தொடர்பில் மட்டும் ஏற்கப்படமாட்டாது. ஏனையவற்றில் அந்தந்த சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தீர்மானிக்கப்படும். இதில் அரசியல் யாப்பு (Constitution), விசேட சட்ட ஏற்பாடுகள் (Special Laws), குடியியல் நடைமுறைக கோவை. (Civil Procedure Code), குற்றவியல் நடைமுறைக் கோவை (Criminal Procedure Code), திருமணப் பெண்கள் ஆதனவழியுரிமைச் சட்டம் (Married Women Property Ordinance), றோமன் டச்சு சட்டம் (Roman Dutch law), ஆங்கிலச் சட்டம் (English law) போன்ற பல சட்டங்கள் முக்கியமாகக் கவனிக்கப்படும். இதில் சான்றுக் கட்டளைச் சட்டமும் (Evide nce ordinance) அதற்குப் பின்னர் வந்த திருத்தங்கள் என்பன மிக முக்கியமானதாகும்.

*திருமணத்தை வெறிதாக்குவதற்கு வழக்கிடல (Void)*

இதற்கு மாவட்ட நீதிமன்றத்தில் (District court) வழக்கிடலாம். தனது திருமணத்தை வெறிதானது (Void) அல்லது வெறிதாக்கத்தக்கது. (Voidable) எனக் கோரி வழக்கிடின் நீதிமன்றம் திருமண விவாகரத்துச் சட்டத்தின் பிரிவுகளுக்கு அமைவாக (Marriage and Divorce act) அது வெறிது. அல்லது வெறிதாகுதகு எனப திருப்திப்படின் அவ்வாறே தீர்க்கும்.

*திருமணம் வெறிதாவதற்கான அடிப்படை (Nullity of marriage)*

a. தடுக்கப்பட்ட உறவு முறையை உடையதாய் இருத்தல்.

b. திருமண நாள் அன்று திறந்தவரில் ஒருவர் 18 வயதை அடையாது இருந்தல்.

c. திறந்தவரில் ஒருவர் ஏற்கனவே திருமணம் முடித்திருத்தல் (பதிவுத் திருமணம்)

இவை பொதுத் திருமணக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 46 ற்கு உட்பட்டதாகும். (General marriage ordinance)

இங்கு திருமணப் பதிவுகள் கட்டளைச் சட்டத்தின் (Marriage Registration ordinance) பிரிவு 16 இன் படி ஆண் 16 வயதிற்கு மேற்பட்டும். பெண் 12 வயதுக்கு மேற்பட்டும் பறங்கியர் ஐரோப்பியருக்கு. பெண் 14 வயது. ஆண் 16 வயது இதைவிட கண்டியர் சட்டம் (Kandian law), முஸ்லிம் சட்டம் (Musilim Law), தேச வழமைச் சட்டம் (Tesawalamai Law) என்பவற்றிலும் மேற்கூறிய படியே திருமணம் செய்வதற்கான பருவ வயது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேச வழமைச் சட்டத்தின்படி வழக்காறாக ஆண் 16 வயதும் பெண் 12 வயதுக்கும் மேற்படின இரு பகுதியாரினதும் பெற்றோரின் சம்மதத்தோடும் தாலிகட்டி சமய முறைப்படியான திருமணத்தை அல்லது சமய குருமார் முன்னிலையில் சயமயச் சடங்கிலான திருமணத்தை மேற்கொள்ளலாம். இதற்கு இரு பகுதியாரினதும் பெற்றோரின் சம்மதமும் கட்டாயமானது. ஆனால் சட்டவிஞ்ஞான கருத்தேற்பின்படி ஒரு பெண் தனது உடற் கூறு காரணமாக 21 வயது வந்த பின்னரே கருவினை (Baby) உருவாக்கும் தகுதியுடையவல் ஆகிறாள். ஆன்ால் திருமண விவாகரத்துச் சட்டம் (Marriage and divorce act), வயது முதிர்ச்சிச் சட்டம் (Age of majority act) என்பனவற்றின் கீழ் 18 வயதைப் பு, ர்த்தி செய்யாத ஆண், பெண் இருபாலாரும் சட்டப்படியான பதிவுத் திருமணமோ அல்லது சட்டரீதியான எந்த செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியாது சட்டம் தடைசெய்கிறது. மேற்கூறியபடி திருமணம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. திருமணப் பதிவின் நோக்கம் சிறந்த சான்று (Bestevidence) என்பதற்கு மட்டும்பொதுத் திருமண கட்டளைச் சட்டத்தின் (General Marriage ordinance) பிரிவு 46இன் காப்பு வாசகமானது (Proviso) வெறிதான திருமணம் ஒன்றின் மூலம் பிறக்கும் பிள்ளைகள் என்றும் சட்டரீதியிலான திருமணம் ஒன்றின் மூலம் பிறந்த பிள்ளைகளாகவே கருதப்படும்.

வெறிதாகுதகு (Voidable) திருமணத் திற்கான அடிப்படைகள்: ஒரு திருமணம் பின்வரும் காரணிகளுக்காக மட்டுமே சட்டப்படி செல்லுபடியற்றது ஆக்க தீர்க்கப்படும்.

I) உடல் உறவு கொள்ள முடியாது இருத்தல்.

II) உடல் உறவு கொள்ள மறுப்புத் தெரிவித்தல். (Without Give Consent to intercourse)

III) அச்சுறுத்தல் (Threats), தவறு (mistake), சித்தசுவாதீனமின்மை. (Insanity- unsound of mind) என்பவற்றின் காரணமாகத் திருமணம்.

IV) வாதிக்குத் தெரியாமல் திருமணம் செய்யும் போது பிரதிவாதி கர்ப்பம் தரித்திருத்தல். (Illegitimacy)

*திருமணம் வெறிது அல்லது செல்லுபடியற்றதாகத் தகுந்ததாயின் அதற்கான சட்ட நிவாரணம்:*

1. எதிராளி அல்லது பிரதிவாதி (Respondend) கீழ்வரும் தேவைப்பாட்டைத் திருப்தி செய்யின் நீதிமன்றம் திருமணத்தைச் செல்லுபடியற்றதாக்காது.

அ. திருமணத்தை மறுப்பதற்கு வாதிக்கு அல்லது வழக்காளிக்கு (Plaintiff) வாய்ப்பிருந்தும் அதனை ஏற்றுத் திருமணம் புரிந்தமை.

ஆ. இவ்வாறு திருமணத்தை வெற்றாக்குவது அல்லது செல்லுபடியற்றதாக்குவது பிரதிவாதிக்கு நீதியற்றதாக இருக்கும் சந்தர்ப்பத்தில் (Unjustice)

2) திருமண விவாகரத்துச் சட்டத்தின் (Marriage and divorce act) பிரிவு 5 (c), (d) கீழ் பின்வரும் தேவைப்பாட்டைப் பு, ர்த்தி செய்யப்படாதவிடத்துத் திருமணத்தை வெற்றாக்க முடியாது.

அ. திருமணமாகி மூன்று (03) வருடத்திற்குள் இராது (Plaint) நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவேண்டும்.

ஆ. மூன்று (03) வருடத்திற்குப் பின்பு எனின் வழக்குத் தாக்கல் செய்ய அல்லது பிராது நீதிமன்றில் தாக்கல் செய்ய விதிவிலக்கு மேற்படி சட்டத்தின் பிரிவு 06 (04) இல் கூறப்பட்டுள்ளது.

3. மேற்படி சட்டத்தின் பிரிவு 5 (d) பிரதிவாதி அல்லது எதிராளிக்கு அது பற்றி அறிவில்லாத போதும் ஏற்கப்படமாட்டாது.

4. பிரிவு 5 (c), (d) -மூன்று (03) வருடங்களுக்கு மேலாக எனின் நியாயமெனின் திருமணம் வெற்றாக்கலாம். இவை வெறிதாந் தன்மைக்காக ஒட்டுமொத்தமாகக் கவனிக்கப்படவேண்டும்.

நீதிமுறைப் பிரிவினைக்காக வழக்கிடல் (Judicial separation) நீதிமுறைப் பிரிவினைக்கான வழக்கு மாவட்ட நீதிமன்றத்திலேயே (District Court) தாக்கல் செய்யப்படவேண்டும். இதற்காகப் பின்வரும் தேவைப்பாடுகளைப் பு, ர்த்தி செய்யவேண்டும்.

I) திருமண விவாகரத்துச் சட்டத்தின் (Marriage and divorce act) பிரிவு 02 ற்கு அமைவாகத் திருமணம் முறிந்துள்ளது. அல்லது பிரதிவாதியுடன் சேர்ந்து வாழ வாதியை எதிர்பார்க்க முடியாத அளவு மோசமாகப் பிரதிவாதி வாதியுடன் முறைகேடாக நடந்திருப்பின்.

II) நீதிமுறைப் பிரிவினையை விசாரிப்பது நீதிமன்றத்தின் கடமையாகும். நிகழ்வுகளை (Facts) விசாரித்த பின் நீதிமுறைப் பிரிவினையை வழங்கும். (தொடரும்)

**ச.சிவரூபன் எல்.எல்.பி**
**சட்டத்தரணி**

# ஜே. வி. பியின் ஆயுதம் அழிப்பு




1985 ஆம் ஆண்டு முதல் ஜே. வி.பி பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திய 26 ஆயிரம் ஆயுதங்களில் 15 ஆயிரம் ஆயுதங்கள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க முன்னிலையில் நேற்றுமுன்தினம் அழிக்கப்பட்டது.

இவற்றில் சட்டவிரோத, குழுக்களிடமிருந்து பாதிக்கப்பட்டவையும் அடங்கும்.

சர்வதேச ஆயுத ஒழிப்பு தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ- 4,6)

# சைக்கிள் தரிப்பிடம்

(இணுவில்)

யாழ்.நகரில் அமைந்துள்ள யாழ்.பிரதம தபாலகத்தில் சைக்கிள் மற்றும் பிற வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கு இடவசதி இதுநாள் வரை ஏற்படுத்தப்படவில்லை.

தபாலகத்திற்கு வரும் பொதுமக்கள் தமது சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்புவற்றை வெயிலிலே விட்டுவிட்டு தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

இதையிட்டு தபாலகத்திற்கு வரும் பொதுமக்கள் மிகவும் கவலை தெரிவிக்கின்றனர். (அ-122)

## பரந்தாமன் ஆச்சிரம அன்னதான மடம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வல்லிபுரக் குறிச்சியில் கோயில் கொண்டிருக்கும் கண்ணபிரானைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்கு நீண்டகாலமாகச் சேவையாற்றி வரும் பரந்தாமன் ஆச்சிரமம் அன்னதான மடம் ஒன்றை அமைக்கத் தீர்மானித்து அதற்கான நிதியுதவியை பக்தர்களிடமிருந்து எதிர்பார்க்கிறது.

இப்பணிக்கு உதவ விரும்புவோர் தமது அன்பளிப்பை இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை, 20 680 இலக்கத்திற்கு, த.மகேந்திரன் முகாமையாளர், இலங்கை வங்கி, பருத்தித்துறைக் கிளை என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்படுகிறார்கள். (து)

## பயிரை அழிக்கும் கால்நடைகள

(இணுவில்)

இணுவில், மருதனார்மடம் போன்ற இடங்களில் விவசாயிகள் தமது நிலங்களில் விவசாயச் செய்கையினை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

குறிப்பாக கரட், கீரை, மிளகாய், வெங்காயம், பயிற்றை, பீற்றூட், புடோல் போன்ற பயிர்ச் செய்கை மேற்கொள்கின்றனர்.

இதன் காரணமாக இப் பகுதியில் இற்றைவரை திரிந்த கால்நடைகளை உடனடியாகக் கட்டி மேய்க்குமாறு கால்நடை உரிமையாளர்களுக்கு இணுவில் கிழக்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி.திருக்குமார் அறிவுறுத்தியுள்ளார்.

தினமும் பல விவசாயிகள் தங்களிடம் கட்டாக்காலி கால்நடைகள் பற்றி முறையிட்டு வருவதாகக் குறிப்பிட்ட தலைவர், பயிர்களைச் சேதப்படுத்தும் கால்நடைகளைப் பிடித்து கமநல சேவைகள் நிலையத்தில் ஒப்படைக்கப்படுமெனவும், நட்டஈடு அறவிடப்படுமெனவும் தெரிவித்துள்ளார். (அ-122)

## 10,11 ஆம் தர மாணவர்களுக்கு

# தகவல் தொழில்நுட்ப பாடம் அடுத்த ஆண்டு முதல் அறிமுகம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர, சாதாரண வகுப்புகளில் அடுத்த ஆண்டு தொடக்கம் தகவல் தொழில்நுட்ப பாடத்தை புதிதாக அறிமுகப்படுத்தவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தற்போது உயர்தர வகுப்புகளில் தகவல் தொழில்நுட்பம் போதிக்கப்பட்டு வருகின்றது. 2006 ஆம் ஆண்டு முதல் 10 ஆம் தரம் தொடக்கம் தொழில்நுட்ப பாடங்களில் ஒன்றாக தகவல் தொழில்நுட்பம் போதிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் தெரிவிக்கின்றார்.

தேசிய கல்வி நிறுவனத்தினால் இதற்கான பாடத்திட்டம் புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கல்வி, வெளியீட்டுத் திணைக்களம் பாடப்புத்தகங்களை அச்சிட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கவுள்ளது.

9 ஆம் தரத்தில் நடாத்தப்படும் பொதுப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இதற்கான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆங்கிலமொழி மூலமாக தகவல் தொழில்நுட்பப் பாடம் போதிக்கப்படவுள்ளது.

தொழில்நுட்பப் பாடம் போதிக்கப்படும் பாடசாலைகளுக்கு கணனி வசதிகள் வழங்கப்படுவதுடன் ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-5)

# வழித்துணை மறுக்கப்பட்டால் போர் வெடிக்கும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

புலிகளிற்கு வழித்துணை வழங்கும் கட்டாயம் ஏதும் அரசுக்கு இல்லையென அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால கூறியுள்ளதை யாழில் உள்ள பொது அமைப்புகள் பல கண்டித்துள்ளன.

புலிகள் சுயமாகத் தமது பயணத்தை மேற்கொள்ளக் கூடிய வல்லமையுடையவர்கள், புலிகளிடம் சகலவிதமான இராணுவக் கட்டமைப்புகளும் உள்ளன.

ஆனால், சமாதான முயற்சிகளுக்கு மதிப்பளித்தே புலிகள் வழித்துணை வழங்குமாறு கோரியுள்ளனர்.

புலிகளின் கோரிக்கைக்கு அரசு சாதகமான பதில் அளிக்கத் தவறும் பட்சத்தில் புலிகள் சுயமாகத் தமது பயணத்தை மேற்கொள்ளும் நிலை உருவாகும். இவ்வாறு உருவாகின்றபோது புலிகளின் பயணத்தைத் தடுக்க முற்பட்டால் அதுவே தமிழீழத்திற்கான இறுதிப் போராக அமையுமென யாழில் உள்ள பொது அமைப்புகள் எச்சரித்துள்ளன. (து-43)

## ...ர்த்தி அகர்வால்



...த்தின்
...டுதது
... காதல்
... வரை
...லகை
...ட்டேன்
...வாய்ப்பு
...விட்டேன். இப்போது 'பம்பரக்கண்
...டிக்க வாய்ப்பு கிடைத்திருக்கிறது.
...கில் ஒரு ரவுண்டு வருவேன் என்று
... அகர்வால்.



## நடிப்பு... ...க இருக்கிறது' -மாதவன்



...க்கென்று
...ாதவனுக்
...ழில் 'பரிய
... உள்ளன.
...மிழ நாட்
...கிறீர்கள?
...ல் இதோ...
...க இருக்க
...பு. எனவே
...து நடிக்க வேண்டும், நலல படங்களை
...ற்சி செய்வதால்தான இந்த தாமதம்.
...நம்பி எடுக்கப்பட்டது. அதுபோல ஒரு
...டக்கவேண்டும் என்பது எனது ஆசை.
... முழு ஈடுபாட்டுடன் எடுக்க வேண்டும.
...ம்.
...ரததுக்கிட்டாங்க. எனக்கு ஏராளமான
... காமெடி, அக்ஷன் என்று என்னாலே
...து நம்புறாங்க. நான் அதற்கு ஏற்ப என்
...திரி இல்ல. விஜய் – தான் செய்யவேண்
... கொடுக்கிறார். எனக்கும் விஜய் மாதிரி
...ம் – திடீர் என்று பாய்கிறா. அஜீத் – நன
...ாத்திரமாகவே மாறி விடுகிறார். ஜெயம
...யைக் காட்டுறாங்க. இதைப் பார்த்
... காட்ட வேண்டியது இருக்கு. நான்
...ள் வர இருக்கிறது. இந்தப் படங்களில
...ற்ற முயற்சி செய்திருக்கிறேன.

## காதலைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது - சந்தியா சொல்கிறார்

'காதல்' படத்தில் நடிக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தபோது அப்பாவுக்கு அதில் விருப்பம் இல்லை. அரைகுறை மனதுடனேயே நான் நடிக்க சம்மதித்தார். படம் வெளியாகி வெற்றி பெற்றதும அம்மாவை விட அப்பா அதிக மகிழ்ச்சி அடைந்தார்.

படத்தில் நான் நடிக்கும்போது எனக்கு எதுவுமே தெரியாது. 'காதல' பற்றி டைரக்டர் என்ன சொன்னாரோ அதை நடித்தேன். என்னுடன நடித்த பரத்தும் டைரக்டர் சொன்னதைச் செய்தார்.

பரத் நல்ல நண்பர். நாங்கள் 'காதல்' படத்துக்காக பல நாட்கள் ஒனறாக நடித்தோம். அன்று முதல் இன்று வரை நண்பர்களாக இருக கிறோம். எனக்கும பரத்துக்கும் காதலா? என்று கேட்கிறார்கள். இப்படி ஒரு வார்த்தையை இப்போதுதான் கேள்விப்படுகிறேன். அப்படி எந்த எண்ணமும் இல்லை.



'காதல்' செய்யும் வயது எனககு இன்னும் வரவில்லை. நான் எனது அம்மா, அப்பாவை நேசிக்கிறேன். அவர்களை மட்டும்தான் காதலிக்கிறேன். காதலைப் பற்றி வேறு எதுவும் எனக்குத் தெரியாது.

மூத்த 'ஹீரோ'க்களுடன் நடிகக் கூடாது என்று எந்த எண்ணமும் இல்லை. பொருததமான வேடம் கிடைத்தால் நடிக்கத் தயார். படத்தில் எனக்கு முக்கிய இடம் கிடைத்தால் நடிப்பேன்.

சிம்புவுடன் நடித்து வரும் 'வல்லவன்' படத்தில் நான் அவருடைய பள்ளித் தோழியாக நடித்திருக்கிறேன். கவர்ச்சி காட்டி நடிகக வில்லை. படம் வெளிவரும் போது இது உங்களுக்குத் தெரியும்.

எனக்கு மிகவும பிடித்த நடிகை ஜோதிகா, 'காதல்' படத்தைப பார்த்துவிட்டு, டைரக்டர் பாலச்சந்தர் போனில் என்னைப் பாராட்டினார். பாரதிராஜா பூச்செண்டு கொடுத்து வாழத்துக் கடிதமும் கொடுத்து இருந்தார். ஒரு பட பூஜையில் என்னை விஜயகாந்தும் பாராட்டினார். இவற்றை எல்லாம் என் நடிப்புக்கு கிடைத்த விருதாகவே கருதுகிறேன்.

இப்போது எனக்கு16 வயதுதான் ஆகிறது. 10 ஆவது வகுப்புப் படித்திருக்கிறேன். எனது அண்ணன் ராகுலிடம் அடிக்கடி சண்டை போடுவேன். இதுதான் எனக்குப் பிடித்த பொழுதுபோக்கு. தற்போது சிம்புவுடன் 'வல்லவன்', பரத்துடன் 'கூடல்நகர்', ஜீவாவுடன் 'டிஸஷும' ஆகிய படங்களில் நடித்து வருகிறேன். ஒரு மலையாளப் படத்தில் நடித்திருக்கிறேன்.

நான் பிறந்தது கேரளா என்றாலும் வளர்ந்தது வாழ்வது தமிழ்நாடு. இரண்டு பட உலகமுமே எனது இரண்டு கண்கள் என்றார் சந்தியா.

## சிராஜ் - பிரீத்தி ஜோடியின் 'ஜெயந்த்'

பொழுதுபோக்கு அம்சம் ஒன்றையே மையமாக வைத்து அனீஷ் கிரியேஷன்ஸ் தயாரிக்கும் படம் 'ஜெயந்த்' சென்னையைச் சுற்றி இதுவரை யாரும் படப்பிடிப்பு நடத்திராத அழகிய இடங்களில் இந்தப் படம் வளர்ந்துள்ளது.

சிராஜ் கதாநாயகனாக நடித்து வரும் மூன்றாவது படம் இது. இவருக்கு ஜோடி பரீத்தி. லிவிங்ஸ்டன், அம்சினி இன்னொரு ஜோடி. அலெக்ஸ் சேது விநாயகம், புவனா, லதா, ரஜினி, பாலு ஆனந்த் மற்றும் பலர் நடிக்கின்றனர்.

சிவ மனோகர் கமராவையும், எஸ்.பி.பூபதி இசையையும், குன்றத்தூர் பாபு சண்டைப் பயிற்சியையும் ஏற்றுள்ளனர். நடனம்:சத்யா ஆனந்த். வசனம்: ராமமூர்த்தி. கார்த்திக்குமார் கதை, திரைக் கதை, எழுதி டைரக்ட் செய்கிறார்.



'சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி'
தங்கர்பச்சான் - நவ்யா

## புதிய அவதாரம்

ஏதோ வந்தோம்... ஏதோ நடித்தோம் என்பதில் விந்தியாவுக்கு உடன்பாடு இல்லை. அதிரடி அக்ஷன் நாயகியாக 'அழகு நிலையம்' படத்தில் புதிய அவதாரம் எடுக்கும் அவர், படுகவர்ச்சி விருந்து படைககவும் தயங்க மாட்டாராம். இனிமேல் அக்ஷனுடன் கூடிய கிளாமர் கரக்டரில் நடிக்க விரும்பும அவர் 'அழகு நிலையம்' படத்தின தொடக்க விழாவில் விஜயசாந்தியை அழைத்த வாழத்துப் பெற்றாராம்.



'ஆயுள்ரேகை'
தென்னவன் - ஸ்ரீ



'கஜினி'
சூர்யா - அஸின்

*மும்தாஜ் முக்கிய வேடத்தில் நடிக்கும் 'பெண் நிலா' படத்தின் மற்றொரு நாயகி 'அபெக்ஷா'.

## தாடி வளர்க்கும் சூர்யா தம்பி

அமீர் இயக்கத்தில் நடிக்கும் 'பருத்தி வரன்' படத்துக்காக, அமீரைப் போலவே அடர்த்தியாக தாடி வளர்த்துக்கொண்டு இருக்கிறார் சூர்யாவின தம்பி கார்த்தி.

படத்துக்கு இன்னும் கூட கதாநாயகி கிடைத்தபாடில்லை என்றாலும இம் மாதம் படப்பிடிப்பைத் தொடங்க முடிவு செய்துள்ள அமீர், 'ராம்' படத்தைவிட இரண்டு மடங்கு இந்தப் படத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று முனைப்புடன் செயல்பட்டு வருகிறாராம்.

# சிறுபான்மை மக்களைப் பிரிக்க பேரினவாதிகள் கடும் முயற்சி!

## விழிப்பாக இருக்குமாறு தமிழ்மக்கள் பேரவை அறிக்கை

(கொழும்பு)

திருகோணமலைத்தமிழ் மக்கள் பேரவை இஸ்லாமிய சகோதரர்களுக்கு ஒரு விழித்து அறிக்கை ஒன்றினை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தமிழ் பேசும் மக்களாகிய தமிழ் மக்களும் இஸ்லாமிய மக்களும் வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தில் ஒன்றுபட்டே இணைந்து வாழ்ந்து வந்திருப்பதாகவும் இன்ப துன்பங்களில் சகோதர உணர்வுடன் ஒன்றுபட்டு நடந்துவருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் வாழ்வும் முஸ்லிம் மக்களின் வாழ்வும் ஒருவரோடு ஒருவர் தங்கியுள்ளதாக இருக்கின்றது என தெரிவித்துள்ள தமிழ் மக்கள் பேரவை, கடந்த காலங்களில் பேரினவாத சக்திகள் சிறுபான்மை இனங்களாகிய தமிழ், முஸ்லிம்களைப்பிரித்து திட்டமிட்ட வெறுப்புணர்வை வளர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டனென்றும் அதில் வெற்றியும் பெற்றன.


இதில் பறக்கணிக்கப்பட்டது சிறுபன்மை மக்களின் விடுதலையே எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில் இன்று பொதுக் கட்டமைப்பு என்ற ஒன்றை வைத்துக் கொண்டு தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரிப்பதற்கும் பொதுக்கட்டமைப்பை நடைமுறைப் படுத்தாது இருப்பதற்கும் திட்டமிடும் ஜே.வி.பி, ஹெலஉறுமய போன்ற பேரினவாத சக்திகளுக்கு துணை போகும் முயற்சியில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, வடக்குக் கிழக்கில் அரச நிர்வாகமும் விடுதலைப் புலிகளின் நிர்வாகமும் இருப்பதை சர்வதேசம் அறியும். இந்த நிலையில் அவர்கள் இருவரும் கைச்சாத்திட வேண்டும் என்பது வெளிப்படையாகும். அதே நேரம் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு சம வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களுக்கு பொதுக்கட்டமைப்பில் உரிய பங்கு வழங்குவதில் உறுதியாகவுள்ளனர். அவ்வாறு உரிய இடம் அளிக்கப்படவில்லையாயின் அதனைத் தட்டிக்கேட்க நாம் தயாராகவுள்ளோம்.

எனவே தமிழர் மண்ணில் சிறுபான்மை இனங்களை மோதவிடும் பேரினவாதிகளுக்கும் முஸ்லிம் மக்களை பகடைகளாக்கி ஆக்கி அரசியல் வியாபாரம் செய்யும் அரசியல் வாதிகளுக்கும் இடம் கொடாதீகள். தமிழ் முஸ்லிம்களிடையே ஏற்படும் முரண்பாடுகளை இரு தரப்பினருமே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று தமிழ் மக்கள் பேரவையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)



தென்மராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிலைய அங்கத்தவர்களுக்கு சுய தொழில் ஊக்குவிப்புக்காக மீளளிக்கும் வகையில் 10ஆயிரம் ரூபா வீதம் 21 பயனாளிகளுக்கு பணம் வழங்கப்பட்டது. பனைதென்னை வள சங்க விரிவாக்க உத்தியோகத்தர் கா. கோபால கிருஷ்ணன் பயனாளிக்கு பணம் வழங்கியபோது.

## மரணத்தின் நிழலில்



சலசலத்து ஓடும் டைக்கிரிஸ் நதி. எதிர்பாராமல் தாக்கும் பாலைவனப் புயல் தோண்டத தோண்டப் பீறிட்ட எண்ணெய் வளம் என இயற்கையால் வடிவமைக்கப்பட்ட ஈராக் நாட்டில் இப்போது ஓடிக்கொண்டிருப்பது இரத்த ஆறு. நாள்தோறும் ஓயாமல் கேட்டுகிறது. வெடி குண்டுச் சத்தம் காலையில் வீட்டை விட்டுப் புறப்பட்டால் மீண்டும் திரும்ப முடியுமா என்பது கேள்விக்குறி சதாம் உசேன் என்ற மனிதனின் 'எழுச்சியும் வீழ்ச்சியும் ஒரு நாட்டின் நிலையையே மாற்றியிருக்கிறது. எப்படி நடந்தது இவையெல்லாம் என்பதை விளக்கும் "மரணத்தின் நிழல்" தொடரை விரைவில் எதிர்பாருங்கள்.

# செய்தித் துளிகள்

## ஒருநாள் தியானம்

(ஊர்காவற்றுறை)

யாழ்.மறை மாவட்ட புனித மரியாயின் சேனையாளருக்கான ஒருநாள் தியானம் (ஞான ஒடுக்கம் ) இன்று காலை 9.00மணிக்கு யாழ் புனிதஅடைக்கல அன்னை ஆலயத்தில் ஓ.எல்.ஆர்.திருப்பலியுடன் ஆரம்பமாகி மாலை 3.00மணிக்கு நிறைவு பெறவுள்ளது.

ஆன்மீக இயக்குநர்களின் மறை உரைகளும் இடம்பெறவுள்ளன.(அ)

## கையளிப்பு

பசுவிக் ஆசிய வள நிலையத்தினரின் வடமராட்சி கிழக்கில சுனாமியால் பாதிக்கப்பட்ட மீன் பிடிக் கிராமங்களின் அவசர மீளமைப்புத் திட்டத்தின் கீழ் மீனபிடி சாதனங்கள் கையளிக்கும் வைபவம் நாளை மறுதினம் பி.ப.2.30 மணிக்கு மணற்காடு புனித அந்தோனியாா தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் K.தர்மலிங்கம் கலந்துகொள்ளவுள்ளாா். (அ)

## ஆனி உத்தர விழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் சிவன் கோவில் வருடாந்த ஆனி உத்தரத்திருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை இடம் பெறவுள்ளது.

1008சங்காபிசேகமும் மகேஸ்வர பூசையும் நடைபெற்று முத்துச் சபபர உள் வீதி உலாவுடன் விழா நிறைவுபெறவுள்ளது. (அ)

## பொதுக்கூட்டம்

(பொன்னாலை)

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் 24ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்கிழமை மு.ப.11.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் வ. முத்து ராசா தலைமையில் நடைபெறவிருக்கும மேற்படி கூட்டத்திற்கு பிரேரணைகள் அனுப்பவிரும்பும் கிளைச் சங்கங்கள் விரைவாகத் தமது பிரேரணைகளை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-49)

## வலி.வடக்கில் மாபெரும் பேரணி

(யாழ்ப்பாணம்)

மீள் குடியமர்வை வலியுறுத்தி வலிகாமம் வடக்கு மக்கள் எதிர்வரும் 15ஆம் திகதி அரசிற்கு எதிராக மாபெரும் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

மருதனார் மடத்தில் இருந்து மாவிட்டபுரம் வரை இந்தப் பேரணி இடம்பெறவுள்ளது.

பேரணியில் காவடிகள், கரகம், அக்கினிச்சட்டிகள் என்பவற்றை மக்கள் எடுத்துச் செல்லவுள்ளனர். (இ-43)

## ஒலிப்பேழை

(இணுவில்)

கோண்டாவில் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் நூதன ஆலய ஒலிப்பேழை வெளியீட்டு விழா எதிர்வரும் 13ஆம திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இசையமைப்பாளர் பத்மநாதன் அவர்களின் உருவாக்கத்தால் ரி.எம.எஸ்.செலலக்குமார் அவர்கள பாடிய பாடல் ஒலிப்பேழையே வெளியிடபபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-122)

## தேர்ததிருப்பணி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவில் சித்திரத்தேர்த் திருப்பணி வேலைகள் எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை காலை 10மணி 51 நிமிடத்திற்கு ஆரம்பமாகவுள்ளதாகவும் அடியார்களை அன்றைய நிகழ்வுகளில பங்கு பற்றுமாறும் தேர்த்திருப்பணிக்கு விரும்பியவரது நன்கொடைகளை வழங்குமாறும் திருப்பணிச் சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ)

## மதமாற்றம்

(கொழும்பு)

பலவந்தமாக மதமாற்றம் செய்யப்படுவதை தடைசெய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள சட்ட மூலம் தொடர்பாக ஆராய்வதற்கு நிலையியல் செயற் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன தினம் அமர்வுகள் ஆரம்பமாவதற்கு முன்னர் சபாநாயகர் இதனைத் தெரிவித்தார்.

இந்த செயற்குழுவின் பிரதமர் நிய மிககப்பட்டுள்ளதுடன் அக்குழுவில் 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 21 பேர் பெயரிடப்பட்டுள்ளதாகவும் கடைசி உறுப்பினரின் பெயர் பின்னர் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-8)

## டிரோன்பெர்னாண்டோ மன்னாருக்கு விஜயம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன்பெர்னாண்டோ நேற்று முன்தினம் மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் செய்தார்.

மன்னாருக்கு விஜயம் மேற்கொண்ட டிரோன் பெர்னாண்டோ மன்னார் அரச அதிபரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின் போது மன்னார் மாவட்ட அரச திணைக்கள செயலக உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது மாவடடத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராயப்பட்டது. (இ-8)

## மஹோற்சவம்

(பொன்னாலை)

வட்டு-கிழக்குப் துறட்டிப்பனை அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுளளது. தொடர்ந்து 11 தினங்கள் மஹோற்சவத் திருவிழா இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 17ஆம திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00மணிக்கு வேட்டைத்திருவிழாவும் 19ஆம் திகதி செவ்வாய்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 20ஆம திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை நண்பகல் 11மணிக்கு தீர்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (அ-49)

## மஹாகும்பாபிஷேகம

(இணுவில்)

கோண்டாவில் ஸ்ரீ பாரதிபுரம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் நூதன ஆலய மஹாகும்பாபிசேகம் 13ஆம் திகதி புதன்கிழமை காலை 5 50 மணி முதல் 6.50 மணிக்குள் நடைபெறவுள்ளது. நாளையும் நாளை மறுதினமும்3 மணி வரையும் பக்தர்கள் எண்ணெயக்காப்பு சாத்தலாம என வும் ஆலய பரிபாலன சபையினா் தெரிவிக்கின்றனா். (அ-122)

## வாழ்க்கைச்செலவு

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நியமிக்கப்பட்ட இந்த உப குழு வாழ்கைச் செலவைக் குறைப்பது தொடர்பான ஆலோசனையை இரண்டுவார காலத்திற்குள் அமைச்சரவைக்கு சமா்ப்பிக்கவுள்ளது.

அதிகரித்துச்செல்லும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற் கான வழிவகைகள், வாழ்க்கைச் செலவு அதிகரித்தமைக்கான காரணங்கள்,வாழ்க்கைச்செலவு அதிகரித்தமையினால் மக்கள் எதிர்கொளளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராய்ந்து இந்தக் குழு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது. (அ-8)

## நால்வர் சுட்டுக் கொலை

கொழும்பு-7 மலசேகர மாவத்தையில் நேற்று முன்தினம் இரவு 4 பேரின் சடலங்களை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர். இரவு 12 மணியளவில் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த சொகுசு வாகனத்தில் இந்த நால்வரின் சடலங்கள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவித்த பொலிஸார் இவர்கள் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (அ-7)

## திருத்தப்படாதவீதி

யாழ்ப்பாணம் பிறவுன் வீதி கலடிச் சந்திப்பகுதி மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி முன்பாகவுள்ள வீதி பலத்த சேதமடைந்துள்ளது.

இதனால் இவ் வீதியூடாக பயணம் செய்வதில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகினறனா்.இவ்வீதியினைத் தினமும் அதிகளவான பல்கலை மற்றும் தொழிலநுட்பக்கல்லூரி மாணவர்கள் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-122)

## வீதி ஓரங்களில் குப்பை எரிப்பு

நல்லூர் இராசவீதியில் வீதி ஓரங்களில் கொட்டப்படும் குப்பைகள மாநகர சபையினரால ஒழுங்காக அப்புறப்படுத்தப்படாமையால் வீதிகளில தேங்கிக்கிடந்து சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கின்றது. என்றும்,

அதே வீதியில் உள்ள காசிப்பிள்ளை பாடசாலைக்கு அருகாமையில் கொட்டப்படும் குப்பைகள் எரிக்கப்படுவதனால் பாடசாலை சிறுவர்களுக்கும் குடியிருப்பாளர்களுககும் சூழல் பாதுகாப்பு ஏற்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றார்கள். (து)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் சில வீதிகளில் கொட்டப்படும குப்பைகள் சம்பந்தப்பட்டவர்களால் உரிய முறையில் அகற்றப்படாமல் வீதிகளில் வைத்து எரிக்கப்படுகின்றதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு குப்பைகளை போட்டிருப்பதால் வீதிகளை அண்மித்த குடியிருபபாளர்கள் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகின்றனா். அத்துடன் வீட்டு மதில்களுக்கு அருகில்குப்பைகள எிக்கப்படுவ தாலமதில்கள் சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் சுட்டிக காட்டுகின்றனா். (க)

## அன்பளிப்பு

இணுவில் அண்ணா தொழிலகத்தினால் இணுவில் கந்தசுவாமி கோவில் தேர், தீர்த்தத் திருவிழாக் காலத்தில் இம்முறையும் இலவசமாக தமிழ் அர்ச்சனை மலர் என்ற முருகன பாமாலை அடியவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. ஒவ்வொரு வருடமும் ஆலயத் திருவிழாக் காலததில ஒவ்வொரு வித பாமாலைப் புத்தகம் அண்ணா தொழிலகத்தினால் வழங்கப்படுவதாக தொழிலக அதிபா் பொ.நடராசா அவாகள் தெரிவித்தார். (அ-122)

## குடிநீர்வழங்கல்

புங்குடுதீவு பிரதேசத்தில் வேலணை பிரதேச சபையினால் பல இடங்களிலும் தொட்டிகளிலும் பைபர்களிலும் நிரப்பபபட்டு குடிநீா வழங்கப்பட்டு வருகின்றது.இந்த வகையில் புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்திற்கு சமுர்த்தி அதிகாரசபையினால் அமைக்கப்பட்ட தொட்டியில் வைத்து குடிநீா்வழங்கபபடுகிறது.

இதற்கு நீண்ட தூரத்தில் இருக்கும் மக்களும் இவ்விடத்தில் வந்தே குடிநீரினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

எனவே இவ்வட்டாரத்தில் கடற்கரைப்பகுதியில் வாழும் மக்கள் தங்களுக்கான குடிநீரினை கடற் கரைப் பகுதியில் வைக்கபட்டுள்ள பைபரில் குடிநீரினை பெற்றுக் கொள்வ தற கான வசதியினை செய்து தருமாறு மக்கள கோரிக்கை விட்டுள்ளனா்.(அ-126)

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் - குறள்

வலம்புரி

# அரசின் பொறுப்பு

உள்நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாததன் காரணமாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி பின்தங்கிப்போயுள்ளது.

இலங்கை தனித்து பௌத்த சிங்கள நாடு என்ற குறுகிய எண்ணப்பாட்டால் வெளிநாட்டவர்கள் அறிவுரை கூறும் அளவிற்கு நிலைமை மாறி விட்டது.

இலங்கை பௌத்த சிங்களவர்களுக்குரிய [illegible] சிந்தனை இந்த நாட்டிற்கு எதைத் தந்தது என்பதை காலம் கடந்தேனும் பேரினவாத சிந்தனையார்கள் சிந்திப்பார்களாயின் இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்றே சாத்தியமாகிப் போகும்.

எனினும் நாட்டை மேலும் குழப்புவதற்கான முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்களே தவிர எல்லா மக்களும் சம உரிமையோடு வாழும் வகையைக் கண்டறிவதில் அவர்களுக்கு எந்தவிதமான அக்கறையும் கிடையாது. இதனை உறுதி செய்வதாக ஜே.வி.பியின் பொதுக்கட்டமைப்பு எதிர்ப்பைக் கொள்ளலாம்.

இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட பேரழிவிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் நிவாரணப்பணிக்கு தடை விதிக்கும் ஜே.வி.பியின் போக்கு மனிதநேயமற்றது என்பதை உலக நாடுகள் உணர்ந்துள்ள போதிலும் அதனை சிங்கள மக்கள் எந்தளவு தூரம் ஏற்றுள்ளார்கள் என்பதே கேள்வி.

இனம் என்ற ஒரே காரணத்திற்காக நீதி மறைக்கப்படுவது அல்லது உண்மை ஓரங்கட்டப்படுவது ஒரு நாட்டின் எதிர்கால சுபீட்சத்திற்கு ஆரோக்கியமானதல்ல.

பொதுக்கட்டமைப்பை ஜே.வி.பி. எதிர்த்தபோது அதற்கெதிராக சிங்கள அமைப்புக்கள் போர்க்கொடி தூக்கியிருக்க வேண்டும்.

இனவாத கொக்கரிப்புக்கள். கடந்த காலத்தைப் பாழாக்கியது போல எதிர்காலத்தையும் பாழாக்க அனுமதிக்கமாட்டோம். இந்த நாட்டில் அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை உண்டு. சிங்கள மக்கள் அனுபவிக்கின்ற அதே உரிமைகளை இந்த நாட்டின் அனைத்து மக்களும் அனுபவிக்க வேண்டும். இத்தகைய வாசகங்களுடன் பேரணிகள் - ஊர்வலங்கள் தென்னகத்து வீதிகளில் நடத்தப்பட்டிருக்கும் ஆயின் ஜே.வி.பி. போன்ற பேரினவாதக் கூட்டங்கள் வாயடைத்துப் போயிருக்கும்.

ஆனால் சிங்கள மக்கள் அதைச் செய்ய முன்வரவில்லை. தமிழ் மக்களை சிங்களக் காடையர்கள் கொன்றொழித்தபோது அவற்றை கைகட்டி வாய் பொத்தி மௌனிகளாக இருந்து பார்த்த சிங்கள மக்கள் அதே நடைமுறைகளை இப்போதும் கடைப்பிடிக்கின்றனர்.

அநியாயங்களை - அட்டூழியங்களை வெறுமனே பார்த்துக்கொண்டிருப்பது அதனை வளர்த்துவிடுவதற்கு ஒப்பானதாகும். இந்தத் தவறை சிங்கள மக்கள் விட்டதன் காரணமாகவே நாட்டில் நிம்மதியற்ற வாழ்வும் ஏழ்மையும் தலை விரித்தாடுகிறது.

இனிமேலும் அத்தகைய தவறுகள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்வது சிங்கள மக்களின் தார்மீகக் கடமையாகும். அதேவேளை பொதுக்கட்டமைப்பில் விடுதலைப் புலிகளுடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்பை உருவாக்கியதுடன் தனது பணி முடிவடைந்துவிட்டதாக கருதலாகாது.

பொதுக்கட்டமைப்பு என்பது சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணியை மேற்கொள்வதற்கான உடன்பாடேயன்றி, அது சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான உடன்பாடல்ல. எனவே ஐக்கிய தேசியக் கட்சியும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவதிலும் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக விடுதலைப் புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்வதற்கான பாதுகாப்பு, பயண வசதி உள்ளிட்டவற்றை வழங்குவதே அரசின் பொறுப்பாகும். இதைவிடுத்து எழுதப்பட்ட யாப்புகளோடு மட்டும் அரசியல் நடத்த முற்பட்டால் அது சமாதானத்தை ஒருபோதும் தரமாட்டாது.

# தேயிலைக்குப் பதில் உருளைக்கிழங்கு செய்கையை நிறுத்துமாறு பணிப்புரை

(நுவரெலியா)

நுவரெலியா பெருந்தோட்டப் பகுதிகளில் தேயிலை பயிர்ச் செய்கைக்குப் பதிலாக உருளைக்கிழங்குபயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா நுவரெலியா மாவட்ட செயலர் ஆர். எம். வி.பி.ரட்நாயக்கவுக்கு சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பியுள்ளார்.இதன்படி தற்சமயம் தோட்டப்புற நிலங்களில் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது ஒரு வருட கால ஒப்பந்தம் முடிவடைந்ததும் குறித்த நிலங்களில் மேலும் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள். அதேநேரம் அந்த நிலங்கள் மீண்டும் தேயிலைச் செய்கைக்கு உட்படுத்தப்படவேண்டும் உருளைக்கிழங்கு செய்கைக்கு அனுமதிக்கப்படமாட்டாது ஏற்கனவே இந்தப் பிரச்சினை தொடர்பில் இலங்கை பசுமை இயக்கம் ரகலை நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடாத்தியது.

உருளைக்கிழங்கு செய்கை காரணமாக நீர்த்தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதோடு தொழிலாளர்களின் வேலை நாட்களிலும் குறைவு ஏற்பட்டிருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தேயிலைச் செய்கையின் எதிர்காலமும் கேள்விக்குறியாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற-9)

# பாணின் நிறையும் விலையும் காட்சிப்படுத்த வர்த்தக, நுகர்வோர் அமைச்சர் நடவடிக்கை

(கொழும்பு)

பேக்கரி உரிமையாளர்கள் தயாரிக்கின்ற பாண் வகைகளின் நிறைகளுக்கு ஏற்ப அவற்றின் விலைகளைக் காட்சிக்கு வைக்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும் என்று வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. நுகர்வோருக்கு குறைந்த விலையில் மாவையும் பாண்வகைகளையும் வழங்கும் நோக்கில் மா இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்ற போதிலும் அதனால் மக்களுக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லையென்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வர்த்தகர்களுக்கு ஒரு கிலோக்கிராம் கோதுமை மா 19 ரூபா 69 சதத்திற்கு விநியோகிக்கப்படுகின்ற போதிலும் சில பேக்கரி உரிமையாளர்கள் 27 ரூபா 50 சதமாகவும் 32 ரூபா பாணின் விலைகளை நிர்ணயித்துள்ளமை ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளதாக வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

'இறக்குமதி செய்யப்படும் மாவில் நூற்றுக்கு 80 வீதம் பாண் தயாரிப்பிற்கு பயன்படுத்தப்படுவதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ-9)

# இராமர் கோயிலை காத்த அனுமன்

(லண்டன்)

அயோத்தி இரர்மர் கோயில் தாக்குதல் முறியடிப்பில் பங்கேற்ற மத்திய ரிசேவ் படை பொலிஸாரில் ஒருவர் பெயர் அனுமன் பிரசாத் என தெரியவந்துள்ளது.

இராமாயணத்தில் இராமருக்கு அனுமன் உதவியதாக புராணம் கூறுகிறது.

இதேபோல் அயோத்தியில் இராமர் கோயிலை காப்பாற்றுவதிலும் அனுமன் உதவி இருக்கிறார்.

அவர் காலை வேளையில் வழக்கம்போல் தனது பாதுகாப்புப் பணியை மேற்கொண்டிருந்தார்.

அப்போது கோயிலை தகர்க்க தீவிரவாதிகள் முயற்சி செய்வதை கண்டுவிட்டார்.உடனடியாக தன்னிடம் இருந்த வயர்லெஸ் கருவி மூலம் சகலருக்கும் இதுபற்றி தகவல் கொடுத்து உஷார்படுத்தினார்.

தீவிரவாதிகள் குண்டு மழை பொழிந்தாலும் உயிரை துச்சமென மதித்து கடமையை நிறைவேற்றினார்.

இந்நிலையில் அனுமன் பிரசாத்திற்கு லேசான நெஞ்சுவலி ஏற்பட்டது. உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அப்போது அவர் அங்கு நின்ற் நிருபர்களிடம் 'சில அசம்பாவிதங்களை கடவுள் தடுத்து நிறுத்துவர். திருப்பவும் இராமர் கோயிலை தகர்க்க முயற்சித்தால் நான் அதே சக்தியுடன் தடுத்து நிறுத்துவேன்' எனக் கூறினார். (க)

# ரயில் கட்டணத்தை அதிகரிக்க போக்குவரத்து அமைச்சர் முடிவு

(கொழும்பு)

இம்மாத இறுதிக்குள் ரயில் கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய தேவையெழுந்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு ரயில் பயணம் செய்வதற்கு 300ரூபா முதல் 400 ரூபா வரை செலவிடப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். பயணிகளிடம் இருந்து ஒரு கிலோ மீற்றருக்கு 36 சதமே ரயில் கட்டணமாக அறவிடப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு தடவைகள் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் சில பிரச்சினைகள் காரணமாக ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லையென போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் பருவகால சீட்டுக்களை வைத்திருப்போரிடம் ஒரு கிலோமீற்றருக்கு 10 சதவீதமே அறவிடப்படுவதாக குறிப்பிட்ட அவர்,இவ்வாறான சூழ்நிலையில் ரயில் சேவையை கொண்டு நடத்த முடியாது என அவர் கூறினார்.எனவே இம்மாத இறுதிக்குள் ரயில் கட்டணங்களை அதிகரிக்க எண்ணியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தில் புள்ளிவிபரவியலாளர் பதவிக்காக தகுதியுடையவர்களை தெரிவு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.அத்துடன் புள்ளிவிபரம்,கணிதம்,பொருளியல், மக்களியல், புவியியல், கணனி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் அல்லது சமூகவியல், ஆகிய பாடங்களில் ஒரு பாடத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற தரச்சித்தியுடனான சிறப்புப்பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

போட்டிப் பரீட்சைகள் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தாங்கள் விரும்பும் மொழி மூலம் விடைஎழுதலாம்.

உள்நாட்டு விண்ணப்பங்களை 10.08.2005க்கு முன்னரும் வெளிநாட்டு விண்ணப்பங்களை 17.08.2005க்கு முன்னரும் கிடைக்கக் கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத்திணைக்களம், பெலவத்தை பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்.

கடித உறையின் இடது மேல் மூலையில் "புள்ளிவிபரவியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாக குறிப்பிடவேண்டும்.

இதுபற்றி மேலதிக விபரங்களை கடந்த 8ஆம் திகதி வெளியான வர்த்தகமானிப் பத்திரிகையில் பார்வையிடலாம்.(க)

# பாதிப்படைந்த பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் கையளிப்பு

(திருநெல்வேலி)

இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினால் வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு மாதர் சங்கங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு இத்தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

தையல் இயந்திரங்களை வழங்கும் இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு சுனாமி அனர்த்த செயலணிப் பொறுப்பாளர் த.யாழமுதன்,வடமராட்சி கிழக்கு தமிழீழ கடற்படைப் பொறுப்பாளர் நிலவன் உட்பட போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-43)

# நூல் வெளியீடு



(யாழ்ப்பாணம்)

முன்னை நாள் வானொலி அறிவிப்பாளர் எஸ்.புண்ணியமூர்த்தியின் The News Read By S. Punniyamoorthy நூல் வெளியீட்டு விழா இன்று பி.ப.4.30 மணிக்கு ஊடகவளம் மற்றும் பயிறசி நிலையத்தில் நிலைய்ப் பணிப்பாளர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ)

# தினசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

உன்னை இகழும் மக்களை நீ வாழ்த்து. அவர்கள் உனக்கு நன்மை செய்வதாக நினைத்துக் கொள். உனக்கு தீங்கு செய்பவர்கள் தங்களுக்குத் தாங்களே தீங்கு விளைவித்துக் கொள்கிறார்கள். உன்னை வெறுக்கும் மக்களிடம் நீ செல். உன்னிடம் இருக்கும் அகந்தையை அவர்கள் அடித்துத் துரத்தட்டும். அது உன்னை இறைவனுக்கு அருகில் அழைத்துச்செல்லும்.

சுவாமி விவேகானந்தர்

# கொழும்பில் 154 புலிகள்; பொலிஸ் புலனாய்வு திணறல்

(கொழும்பு)

கொழும்பில் தங்கியுள்ள விடுதலைப்புலிகளின் 154 உறுப்பினர்களை கைதுசெய்ய முடியாத நிலையில் பொலிஸ் புலனாய்வுத் துறையினர் இருப்பதாக கொழும்பு நாளேடு ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பிற்கு வந்துள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் குறித்து சகல தகவல்களையும் கண்டறிந்துள்ள போதிலும் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு அமைய எந்த ஒரு விடுதலைப்புலி உறுப்பினரையும் கைதுசெய்ய முடியாத நிலை இருப்பதால் பொலிஸ் புலனாய்வுத்துறையினர் பெரும்நெருக்கடிக்கு முகம் கொடுத்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் நடத்துவதற்காகவும், உளவு பார்ப்பதற்காக்வும் கொழும்பிற்கு வந்துள்ள 154 விடுதலைப்புலி உறுப்பினர்கள் பற்றிய அனைத்துத்தகவல்களை-யும் பொலிஸ் புலனாய்வுத்துறையினர் சேகரித்துள்ளனர்.

எனினும் இவர்களுக்கு எதிராக எந்த விதமான குற்றச்சாட்டுகளையும் சுமத்த முடியாமல் இருப்பதால் அவர்களை கைது செய்து நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்த முடியாமல் இருப்பதாக பொலிஸ் புலனாய்வுத் துறையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு கொழும்பிற்கு வந்துள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கல்கிசை, கிராண்பாஸ், கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை, மருதானை, கொள்ளுப்பிட்டி உட்பட்ட இடங்களில் இருக்கும் விடுதிகளில் தங்கியிருப்பதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.(இ-4)

## பீற்றர்ஸன் ...

இது இவ்வாறு இருக்க பீற்றர்ஸனின் விஜயம் தாமதமானால் விசேட சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு வருவார் என மற்றுமொரு தகவல் தெரிவிக்கின்றது.

விடுதலைப்புலிகளின் போக்குவரத்துத் தொடர்பான நெருக்கடிக்குத்தீர்வு காணும் வகையில் அரசாங்கத்தின் பதிலை தாம் எதிர்பார்த்திருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-4)

# கும்பாபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு சிறுப்புலம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை நடைபெறவுள்ளது.

கடந்த பல வருடங்களாக யுத்தத்தினால் அழிவடைந்து காணப்பட்ட இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றவுள்ளது. (இ-8)

# அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு உதயதாரகை சனசமூக நிலையப் பகுதியில் கலையரங்குடன் கூடிய பாலர் பாடசாலைக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று காலை இடம்பெறவுள்ளது.

இக்கட்டடத்தொகுதிக்கான அடிக்கல்லை லண்டனில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள மேற்படி கிராமத்தைச் சேர்ந்த எஸ்.வசந்தன் நாட்டிவைப்பார். (இ)

## போர்ப்படை...

இந்நிகழ்வில் பயிற்சி நெறியைநிறைவு செய்த போராளிகளுக்கான சான்றிதழ்களை தலைவர் வழங்கிக் கௌரவித்தார்.

இதன்போது பயிற்சி நெறிகளை வழங்கிய ஆசிரியப் போராளிகளுக்கும் தலைவர் சிறப்புப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். (இ-4)

## பொதுக்கட்ட...

பி.பி.சி.தமிழோசைக்கு அளித்த செவ்வியிலேயே கருணாரத்தின இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் விடுதலைப்புலிகளும், அரசும் கைச்சாத்திட்டுள்ள சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்பை எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவு விரைவில். செயற்படுத்த அவசியமான நிர்வாக அலகுகள் பற்றி ஜனாதிபதியும் உயர்மட்டத் தலைவர்களும் தற்போது தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

சுனாமி நிதியினை எப்படி விநியோகிப்பது என்பது பற்றி இலங்கையின் கொடையாளி நாடுகள் இலங்கை நிதியமைச்சு மற்றும் பிறதிணைக்களங்கள் ஆகியவற்றுடன் ஆலோசனை நடத்தப்படுகின்றது.

பொதுக்கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதிலும் அதற்கான அரசு மற்றும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளை நியமிக்கும் பணியில் இருதரப்பிலிருந்தும் பல விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கூடிய விரைவில் அரசு தன்னுடைய பிரதிநிதிகளை அறிவிக்கும் இதுவரை விடுதலைப்புலிகள் தரப்புடன் இது பற்றி பேசவில்லை. எங்களுடைய அறிவிப்பு வந்த பிறகு விடுதலைப்புலிகள் தரப்பு தங்கள் பிரதிநிதிகளை அறிவிக்கலாமென ஜனாதிபதியின் செயலாளர் கருணாரத்தின மேலும் கூறினார். (இ-4)

# சுனாமி மத்தியஸ்த சபை விரைவில் செயற்படும்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விசேட மத்தியஸ்த சபைக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சொத்து மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக இந்த மத்தியஸ்த சபைகள் செயற்படுமென இலங்கை சட்ட உதவி ஆணைக் குழுவின் தலைவர் சட்டத்தரணி எஸ்.எஸ்.விஜியரத்தின தெரிவித்தார்.

சுனாமி மத்தியஸ்த விசேட நடவடிக்கைகளுக்காக கிராம சேவையாளர்களை பயிற்றுவிக்கும் திட்டம் தொடர்பாக கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மத்தியஸ்த அதிகாரிகளை பயிற்றுவிக்கும் செயற்திட்டம் நிதியமைச்சர் ஜோன் செனவிரத்தின தலைமையில் நடைபெற்றது. சுனாமி விசேடமத்தியஸ்த செயற்திட்டத்தின் கீழ் இந்த செயற்பாடுகளில் பங்கு கொள்வதற்காக 1699 கிராமசேவையாளர்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்தார். (இ.8)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு கோடிக்கணக்கான நிதியுதவி

## ஓமல்பே சோபிததேரர் குற்றச்சாட்டு

இலங்கை அரசாங்கத்தை விட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு கோடிக்கணக்கான நிதியுதவிகள் வழங்கப்பட்டிருப்பதாக ஜாதிக ஹெலஉறுமய குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு விவாதம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜாதிக ஹெலஉறுமயவின் பொதுச்செயலாளர் ஓமல்பே சோபிததேரர் இந்தக்குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்கு கிடைக்கும் நிதியுதவிகள் குறித்து கண்காணிப்பதற்கு அரசாங்கம் குழுவொன்றை நியமிக்க வேண்டுமெனவும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினருக்கு கிடைக்கும் கோடிக்கணக்கான நிதியினை அவர்கள் எந்த விதமான வரிகளும் செலுத்தாமல் சுதந்திரமாக எடுத்துச்செல்வதாகவும் தேரர் குறிப்பிட்டார்.

ஓமந்தையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அதிகாரி கோடிக்கணக்கான நிதியுடன் கைதுசெய்யப்பட்டமையை தேரர் ஆதாரமாகக் குறிப்பிட்டார். (இ-4)

## சொகுசு வாகன...

கம்பளைப் பகுதியில் தேயிலை தோட்டம் ஒன்றின் உரிமையாளரான இவர் தேயிலை வர்த்தகத்தின் நிமிர்த்தம் ஏனையவர்களுடன் கொழும்புக்கு வந்த சமயம் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை கம்பளையில் இருந்து இவரும், ஏனையோரும் இரண்டு வாகனங்களில் கொழும்பிற்கு வந்ததாகவும் இடைவழியில் பொலிஸார் அணியும் சீருடை அணிந்த நபர்களினால் வழிமறிக்கப்பட்டு நீலநிற வாகனமொன்றில் கடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு வாகனங்களில் இவரும் இவரது தோட்ட உத்தியோகத்தர்களும் கொழும்பு நோக்கிப் புறப்பட்ட போதிலும் தோட்ட அத்தியட்சகரையும் வாகனமொன்றையும் அந்நபர்கள் விடுவித்துள்ளார்கள்.

நீதிவான் சம்பவ இடத்திற்கு நேற்றுக்காலை சென்று மரண விசாரணையை மேற்கொண்டார்.

கொல்லப்பட்ட ஏனைய மூவரும் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-4)

## தமது பொறுப்...

பாதுகாப்பு அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதான நடவடிக்கைகளில் மத்தியஸ்தம் வகிப்பதற்கு வந்த நோர்வே தரப்பினர் தற்பொழுது பங்காளிகளாக செயற்பட்டு வருவதாக கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

புலனாய்வுத்துறையினர் மட்டுமல்ல சாதாரண இராணுவத்தினரும் மற்றும் பொலிஸார் உட்பட சாதாரண பிரஜைகளும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இவற்றை தடுத்து நிறுத்துவதற்கு சகலரும் பேதங்கள் இன்றி இணைந்து செயற்பட வேண்டும் என தனது உரையில் தெரிவித்தார். (இ-4)

## நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவை நடாத்தும்

### கலாசார விழா-2005

**தலைவர்**
திருமதி சு.தெய்வேந்திரம் (நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவைத்தலைவரும், பிரதேச செயலரும்)

**காலம்**
10.07.2005 ஞாயிறு (இன்று) பிற்பகல் 2.00 மணி

**இடம்**
நல்லூர், இளங்கலைஞர் மண்டபம் (சட்டநாதர் கோவில் வீதி)

**பிரதம விருந்தினர்**
திரு. க.கணேஷ்
(அரசாங்க அதிபர்,மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்)

**கௌரவ விருந்தினர்**
திரு. புதுவை இரத்தினதுரை
(பொறுப்பாளர், கலை பண்பாட்டுக் கழகம்)

**சிறப்பு விருந்தினர்**
கலாநிதி எஸ்.சிவலிங்கராசா
(தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

**கலை நிகழ்வுகளும் இடம் பெறும்**

**அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.**

பிரதேச செயலகம்,
நல்லூர்.

நல்லூர் பிரதேச செயலக
கலாசார பேரவை

(இ-003)

நியூ சித்ரா ரேடேர்ஸ்

எம்மிடம் சகலவிதமான ரீவிக்களும், CD, VCD, DVD PLAYER களும், சகலவித மான ரேடியோக்களும் மற்றும் கிறைண்டர்கள், மணிக்கூடுகள், மின்சார உபகர ணங்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.
மேல்மாடி இல. 135/1 கஸ்தூரியார் வீதி,
(குளத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம்
T.P: 021 222 3226
(C-அ-1348)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்.
சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த
6'2"
காட்சி நேரம்: (பு.நே)
10.30, 2.30, 6.30, 9.30
வெகுவிரைவில்
அர்ஜுன், சினேகா நடித்த
சின்னா

மனோகரா
யாழ்ப்பாணம்
ஷங்கரின் இயக்கத்தில்
சியான் விக்ரம்,சதா, விவேக் ஆகியோரின் சிறப்பு நடிப்பில்

அந்நியன்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30
இசை: ஹரிஸ் ஜெயராஜ்

வாழ்த்துகிறோம்

"இன்று இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறும் நல்லூர் பிரதேச செயலக கலாசார விழாவில் பட்டமளித்துக் கௌரவிக்கப்படுபவரும் எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவருமான யாழ். நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த சைவப்புலவர், கவிமணி, சிவநெறிக் கலாநிதி வில்லிசைக் கலைஞர் திரு. இராசையா ஸ்ரீதரன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.
பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி
கலாநிதி
பிரம்மஸ்ரீ காரை கு. சிவராஜசர்மா
(9733)

நிறைஞ்சனாஸ் சினிமா
சங்கானை
ரஜனி, கௌதமி நடித்த
தர்மதுரை
காட்சி நேரம்: 11.00, 2.45
06.00 (பு.நே)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-234999
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.